கலாநிலயம்

V. 1. No. 35. 30 Oct 1928

JL
772:11, N28 KN
N28.1.35
189018

1001

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

| வருஷ சந்தா | | காரியாலயம்:— |
|---|---|---|
| இந்தியா, பர்மா, ஸிலோன் | ரூ. 7 8 0 | No. 11, வெள்ளாளர் தெரு, |
| புற நாடு ... ... | ரூ. 9 0 0 | புரசைபாக்கம், சென்னை. |

Vol 1.] 1928௵ ஆகஸ்டு ௴ 30௳ [No. 35.

20 NOV 1928

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 681 |
| 2. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் — T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 683 |
| 3. | தமிழ்ப் பாடம் | 685 |
| 4. | பினாதன். T. R. இராஜகோபால் | 687 |
| 5. | காந்திமதி (A Novel) — T. N. சேஷாசலம் B. A., B. L. | 689 |
| 6. | தேவாரமும் ஐந்திணையும் — E. N. தணிகாசலமுதலியார் B.A.,B.L. | 691 |
| 7. | அகப்பொருள் வரலாறு — K. இராமரத்நம் ஐயர் B.A. | 693 |
| 8. | கம்பராமாயணம் — T. N. சேஷாசலம் B. A.,B. L. | 695 |
| 9. | வர்த்தமானம் | 699 |


## கலா நிலயம்.

### ஒன்றினைப்பற்றி இருவர் பேசியது.

189018

ஒரே நாளில் ஒரே தினத்தில் ஒரேவித சந்தர்ப்பத்தில் இருவர், முன்னூறு மைல்களுக்கப்பால் இருக்கின்ற இரண்டு இடங்களில் தனித்தனி நின்று நிகழ்த்திய கட்டுரைகள் ஒன்றினை ஒன்று எதிரெதிர் மறுப்பதற்குத் தோன்றினபோல் நேர்ந்திருக்கின்றன. ஒன்று, சென்னைச் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் தேரிய மாணவர்க்குப் பட்டம் அளிக்கும் பொருட்டுச் சென்ற வியாழக்கிழமை கூடிய கற்றோர் கழகத்தின்முன் நம் கவர்னர் H.E. லார்ட் கோஷன் இந் நகரில் பேசியது.

மைசூர்ச் சர்வகலாசாலை மாணவர்க்குப் பட்டம் அளித்தற்குக் கூடிய கழகத்தின் முன் அவ்வூரில் C. இராமலிங்க ரேட்டியார் அவர்கள் அதே தினத்தில் பேசியது மற்றதாகும். இவ்விரண்டு உரைகளையும் ஒரே பக்கத்தில் அடுத்தடுத்து அச்சிட்டிருக்கின்ற "இந்து பத்திரிகை" (The Hindu), இவைகளை ஆராய்ந்து வரைந்துள்ள தன் தலையங்கத்தை, ஒன்றினை ஒன்று ஓரளவு சார்ந்து பூர்த்தி செய்கின்றதெனக் கூறி ஆரம்பித்திருக்கின்றதெனினும், அவைகளுக்குள் கறுப்பிற்கும் வெளுப்பிற்கும் உள்ள வேறுபாடு விளங்கிக் கிடக்கின்றதென்றே நாம் எண்ணுகின்றோம்.

இவ்விருவர்தம் உரைநின்று அவரவர், கல்வியின் நோக்கத்தையும், அதனைப் போதிக்கும் கலாசாலைகள் ஆற்றவேண்டிய கருமத்தையும், கற்போரின் நாடுதற்கேற்ற நெறியையும், இவை யாவும் வாழ்க்கைக்கு உற்றதுணை ஆகும் முடிபையும், இவையனைய பிறவற்றையும்பற்றிக் கொண்டுள கருத்துக்கள் எல்லாம் மாறுபட்டு நிற்கின்றநிலையை எடுத்திங்கு முற்றிலும் காட்ட இடமில்லை; அவசியமுமில்லை. எனினும், வெள்ளிடை மலையாய்த் தென்படுகின்ற இரண்டொரு பாகங்களை இங்கு நோக்காதகல இயலாது.

"வயிற்றுப் பிழைப்பல்ல வாழ்வு, என்பதை மறவாதீர், மாணவர்காள்" என்னும் கல்வித் தத்துவத்தின் மூலமந்திரத்தைத் தன் உள்ளக் கிடக்கையாகக்கொண்டு திகழ்கின்றது,சென்னைக்கவர்னரின் செம்மைசேர் கட்டுரை. ஆந்திரதேசச் சர்வகலாசாலையின் வைஸ் சான்ஸலராயிருக்கும் ஸ்ரீமான் இராமலிங்க ரெட்டியாரவர்களின் கட்டுரையோ நுனிமுதல் அடிவரையில் வயிறு தவிர வாழ்வில் வேறொன்றும் இருப்பதாக எண்ணி விவகரித்ததென்று நினைக்க இடமில்லாது அமைந்திருக்கின்றது. 'மாணவர்காள், நும் மனதிலே வாழுங்கள்' என்பர் நம் கவர்னர்; "மண்ணிலே புதைந்து ஆழுங்கள்" என்பர் ஸ்ரீமான் C. R. ரெட்டியார். கைகூட வல்லதாயினும் அல்லதாயினும், உயரிய நோக்கமொன்று ஒவ்வொருவனும் தன்னுடைய வாழ்விற்கு அமைத்துக்கொண்டு அதனை எய்த முயல்வதே உத்தம தத்துவம் என்றும், நோக்கம் நிமிர்ந்த அளவு ஒருவன் உயர்ந்தெட்டப் பெறாத காலையும், ஏறிய

வரையில் அவன் ஏற்ற மடைந்தவனாகின்ற நலமுடையவனாகின்றா னென்றும் கூறிச் சென்னைக் கவர்னர் தூய நோக்கத்தின்பால் ஊக்கத்தை விளைவிக்கின்றார். இது அவருக்குமுன் எவ்வளவோ பேர் சொல்லி யிருக்கின்றார்கள் என்பது உண்மையே. இதைக் கேட்ட நம் மாணவர்க ளெல்லாரும் அம்மண்டபம் விட்டுச் செயர்கரிய கருமங்கள் செய்யும் வீரர்களாய் வெளி வந்திலர் என்பதையும் யாவரும் அறிவர். ஆனால், நல்லுரை நவில்வதால் பழுதில்லை. கூறக் கூற அதன் மேன்மை நிறை வொழியக் குறைவெய்திடாது. ஆனால் ஆந்தரதேசச் சர்வ கலாசாலையின் முதலதிகாரச் செவ்விபெற்ற ஸ்ரீமான் C. இராமலிங்கம் ரெட்டியார் அவர்களுக்கு இவையாவும் எள்ளிப் பரிகசித்தற்கொத்த செய்திகளாகவே இருக்கின்றன. "வருடா வருடம் காரியசாத்திய மற்ற உயரிய நோக்கங்களென்று பேரோடு பகட்டாய் விடுகின்ற ஆகாச வாணங்கள்" என இவைகளைப் பரிகசித்துச் சலிப்படைகின்றார். மற்றுக் காரிய சாத்தியமான நோக்கம் கல்விக்கு எத்தகையதாக இருக்கவேண்டுமென்று அவர் கருதினா ரென்பதைப் பெண்கல்வியைப்பற்றி அவர் கூறிய உரைகளால் நன்குணரலாம். மாதர் தம் மனையறத்தை நடத்துதற்கு இன்றியமையாதனவாய் அவர் கருதுபவைகளுள், பூத சாஸ்திரம், தேக சாஸ்திரம், ஜீவ சாஸ்திரம், பொருள்முறைச் சாஸ்திரம், விவகாரச் சட்டங்கள் முதலியவைகளே முக்கியமாகின்றன. இல்வாழ்க்கை பண்பும் பயனு முடையதாதற்கு வேண்டியவைகள் இவைகளல்ல. "அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது,' என்னும் மனநிலை எங்கே, விவகாரச் சட்டங்கள் தெரிந்திருக்க வேண்டு மென்பது எங்கே! மிஸஸ் ஸிட்னி வெப் என்னும் ஓர் அம்மையார், ஆகார விஷயத்தில் இந்தியர்களைவிடச் சுகாதாரத்திற்கு எதிராக நடக்கும் ஜாதியார் வேறெவரும் இல்லையென்று ஸ்ரீமான் C. R. ரெட்டியாரவர்களிடத்தில் கூறி உள்ளனராம். அதனை இவர் ஆதரித்துப் பேசுபவராய் :—

> "ஏழைகளுக்கு உண்பதற்கு ஒன்றுமில்லை. பணமுடையவர்களுக்கோ எதை உண்பது என்று தெரியாது—நெய் அதிகம், சர்க்கரை அதிகம், 'மசாலைச் சாமான்' அதிகம்...எல்லாவற்றையும் கண்டபடி கலந்துண்டு, நீர் நோயுற்றுச் சுகமும் வலியும் இழந்துபோவதே இந்தியர்தம் கடன் ஆயிற்று.
>
> ஐரோப்பியர்கள் தின்கின்ற உணவின் தன்மையைப்பற்றிய புத்தகங்கள் எண்ணிறந்தன. இந்தியர்கள் உண்ணும் உணவு, சாஸ்திரப்பிரகாரம் ஆராய்ச்சி செய்யப்படல் வேண்டும்.
>
> வரவு செலவு திட்டத்தை நேராக நிர்ணயித்து வீட்டுக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.
>
> இந்தியாவில் விதவைகள் பெரும்பான்மை, ஆநாதைகளாய்த் தம் உரிமை இன்னதென்பதும், சொத்து விஷயமான சட்டங்களும் தெரிந்துகொள்ளாமல், தம் உறவினர்களாகிய ஆடவர்கள் புரியும் கொடுமைக்கு ஆளாகிக் கிடக்கின்றனர். தம்முடைய உரிமைகளைக் காத்துக் கொள்ளும் சக்தி அவர்களுக்கில்லை."

என்று சாற்றுகின்றார். சர்க்கரையும் நெய்யும் சேரவேண்டிய அளவைக் கற்பதுதான் கல்வியென்று அவர் நினைப்பதாக நாம் கூறவில்லை. விவகாரச் சட்டங்களும் வீட்டுக்கணக்கும் விதவைகளுக்கும் மற்ற மாதர்களுக்கும் எத்துணை அவசியம் என்பதை நாமிங்கு வாதிக்கவில்லை. ஆனால் கலையிற் கனிந்த உள்ளத்தராக்குவதற் கென்று அமைந்த சர்வகலாசாலையின் சார்பில் இவைகளெல்லாம் சொல்வதற் கொத்தனவாவதோ என்றுதான் சிறிது சந்தேகம் கொள்கின்றோம்.

இவைகளெல்லாம் சிறப்பாய்ச் சில தொழில்களைச் சரிவர நடத்துதற்கு வேண்டிய அறிவுகளாம். கலாசாலைகளல்ல இவைகற்குமிடம். மற்று, அவை தொழிற்சாலைக ளன்றோ ஆகிவிடும். சென்னைக் கவர்னர்,

> "கல்வியின் திறத்தை, மாணவர்கள் பெற்ற அறிவின் அளவைக்கொண்டு மதித்தல் கூடாது. கலாசாலையில் கற்றுவந்தபின் அவர்களது மனம் எந்த நிலை அடைந்திருக்கின்றதென்பதொன்றே கருதல் வேண்டும்"

என்று தம் கட்டுரையில் வகுத்திருப்பதுதான் கலாசாலைகளால் வரும் உபயோகத்தை உண்மையாகக் காட்டுகின்றதென்று எண்ணுகின்றோம்.

H. E. லார்ட் கோஷன் அவர்கள் கட்டுரைக்கும் ஸ்ரீமான். C. R. ரெட்டியார் அவர்களின் கட்டுரைக்கும் இன்னொரு முக்கிய வித்தியாசம் இருப்பதாக எமக்குத் தோன்றுகின்றது. முன்னவர், தன் மொழியாய்ச் சொல்லாமற் போனாலும், அவர் எடுத்தாண்ட மேற்கோள்களால் இவ்வுலகில் கடவுளிற்கும் சிறிது இடம் கொடுத்துப் பேசுகின்றார். கடவுளின் திருவுளத்தின் வண்ணம் இணங்கி நடக்கக் கற்பதல்லால் கல்வி யென்பதொன்றில்லை. எல்லாம் தன்னாலேயே தனக்கே 'இன்று இன்று' என்று செய்து முடித்துக்கொள்ளும் வகையே நாடினாலன்றித் தனக்கோர் கதியில்லை என்னுங் கருத்து உள்ளிருந்து உழக்குமாயின் வாழ்நாள் பாழாவதற்கு வேறு வழி வேண்டா. ஸ்ரீமான் C. R. ரெட்டியாரவர்கள் நாத்திகம் பேசினா ரென்று நாமிங்குச் சொல்லவில்லை. ஆனால் அவர் கட்டுரையில் தெய்வச்செயலிற்கு இடம்வைக்கக்கண்டிலம்.

எல்லாப்படியாலும், வயிற்றிலே வாய் வைத்துப் பேசுதலினும் வானத்தை அண்ணாந்து நோக்குவதே மேதக்கது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது, உண்மையே. ஆனால், அது குருவியாகவாவது இருக்கும். மற்றுத் தாழத் தாழ ஆழ்ந்தாலோ மாந்தர் எப்பிறவி யாவரென இயம்பல் வேண்டுமோ!



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

[667-ம் பக்கத் தொடர்ச்சி]

### உயிர் தவழும் உடலம்.

அரசனது பிள்ளை, அதுவும் ஒரே பிள்ளை, முதுமையிற் பிறந்த பிள்ளை, கடவுளது அருளால் பிறந்த பிள்ளை. இத்தகைய பிள்ளை எவ்வளவு இழிவானவனாக இருந்தாலும், பிள்ளையைப் பெற்றோர் செல்வமாகவே வளர்த்திருப்பார்கள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. ஆனால் மயிலின் குஞ்சோ எல்லோருக்குமே பொன் குஞ்சு. தவங் கிடந்து முதுமையில் பிறந்த அரசாது ஒரே பிள்ளை அன்பும் அறிவும் அழகும் உடைய பிள்ளையாக இருந்தால் அதனை எத்துணைச் செல்வமாக வளர்ப்பார்கள். அதனை உயிர்போல வன்றோ கொள்வர் பெற்றோரும் மற்றோரும்.

நமது நாயனாரை ஒன்றும் அறியாத வேடனாகக் கூறுவர் நக்கீரர். சேக்கிழாரோ, சிறு பொழுதிலேயே அறிவிற் பெரியவராகத் திகழ்ந்தனர் திண்ணனார் என்கின்றார். கல்வியாவது என்னை? "புலன் கொளுவ, மனமுகிழ்த்த சுருணீக்கி மலர்விக்கும் கலை" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் சேக்கிழாரேகூறுவர். முகிழ்ந்து மொக்காருயிக்கும் தாமரைப்பூவின் இதழ்களை விரலால் பரப்பி மலரச்செய்வது போல, மனத்திலே குவிந்திருக்கும் இயற்கை அறிவை விரைவில் மலரச் செய்தலாம். அஃது இயற்கையாகவே மலர்ந்தாலும் மலரலாம். இயற்கையாக ஒவ்வொருவனிடத்திலும் உள்ளீடாகக் கல்வி இருந்துகொண்டுதான் இருக்கின்றது. அரும்பு மலர்வதற்கு நிலவளனும் நீர்வளனும், காற்றுவளனும் கதிரவன் வளனும் வேண்டியிருப்பது போல மனமானது மலர்வதற்கும் சுற்றியுள்ளார் நலனும் கற்பிப்பார்நலனும் உற்றார்நலனும் பெற்றார்நலனும் வேண்டும். இயற்கைஅறிவின் இன்றியமையாமையும் செயற்கைஅறிவின் திறமையும் இதனால் நன்கு விளங்குகின்றன. திண்ணனார் விற்றொழில் கற்றார் எனக் கூறும் போதும் "படைகளும் மலரக் கற்று" என்று அந்த உவமையே கூறுகின்றார். மனமானது அரும்பு போல மூடி நிற்பதைச் சிறிதுசிறிதாக மலர்வித்தல்தான் கல்வி என்கின்றார் சேக்கிழார். இதனின்றும் கற்பிப்போர், இயற்கையைப் பின்பற்ற வேண்டும் என்பது எளிதாக விளங்குகின்றது. நிற்க, திண்ணனாரும் சிறுகச் சிறுக அறிவு ஆழம்பெற்று வளர்ந்து வந்தார். ஆங்கிலச் சிறு பாட்டொன்று, ஒரு குருவி முதலிலே முட்டையே உலகம் என்றும், பின்னர் முட்டையினின்றும் வெளி வந்தபோது கூடே உலகம் என்றும், கால்முளைத்தபோது மரமே உலகம் என்றும், இறகு முளைத்தபோது தோட்டமே உலகம் என்றும், சிறுகச்சிறுக அறிந்து கொண்டே போவதை அழகுபட எடுத்துரைக்கின்றது. அதுபோலத் திண்ணனாரும் வீட்டிலாடித் தெருவிலோடிச் சோலையில் உலாவிப் பின் ஊருக்கு வெளியிலுள்ள காட்டில் திரிந்து தமது அறிவை அகலப்படுத்திக்கொண்டே வந்தனர். அன்பையும் அம்முறையே அகலப்படுத்திக்கொண்டு வந்தனர். காளத்திமலையை அடைந்ததும் அவ்வன்பும் அறிவும் தமது எல்லையை அடைந்தன எனலாம்.

குழந்தைகளைத் தோட்டமெனக்கூறி Kinter Garden என்னும் ஓர் கல்வி முறை நிலவுகின்ற தல்லவா.

திண்ணனார் மழலைச்சொல் பேசத்தொடங்கிய நாளிலேயே இன்பம் ஊற்றெடுக்கப் பேசினார் என்கின்றார் சேக்கிழார். நக்கீரரோ "கடுத்தெழு வெவ்வுரை" என்று அச்சுறுத்துகின்றார். ஆனால் சேக்கிழாரோ

> தண்மலர் அலங்கல் தாதை தாய்மனம் களிப்ப வந்து
> புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாம் திருவாய் நீரில்
> உள்நனைந் தமுத மூறி ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
> வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா [நின்றார்.

என்கின்றார். கண்டவர்களும் கேட்டவர்களும் 'என் கல்வியே' என்று அந்தக் குழந்தையைக் கட்டியணைக்காதிருப்பார்களா? இவர் வில்பிடிக்கப் போகின்றார் எனக் கேட்டவேடர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அறிவிற் சிறந்தவன் திண்ணன் என்று அவர்மேல் அவர்கள் எல்லோரும் உயிராய் இருந்தனர். தம்மூரில் உள்ள பொருளை எல்லாம் கொண்டுவந்து கொடுத்தனர்.

> மலைபடு மணியும் பொன்னும்
> தரளமும் வரியின் தோலும்
> கொலைபுரி களிற்றின் கோடும்
> பீலியின் குவையும் தேனும்
> தொலைவில்பல் நறவும் ஊனும்
> பலங்களும் கிழங்கும் துன்றச்
> சிலையுடை வேடர் கொண்டு
> திசைதொறும் நெருங்க வந்தார்.
>
> மல்கிய வளங்கள் எல்லாம்
> நிறைந்திட மாறில் சீறூர்
> எல்லையில் அடங்கா வண்ணம்
> ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
> பல்பெருங் கிளைஞர் போற்றப்
> பராய்க்கடன் பலவும் நேர்ந்து
> வில்விழா எடுக்க என்று
> விளம்பினன் வேடர் கோமான்.

யார் யார்? அயல் நாட்டு வேடர்களும் அவரை அவ்வளவு உயர்வாக எண்ணினர். ஏன்?

> வேடர்தம் கோமான் நாகன்
> வென்றிவேள் அருளால் பெற்ற
> சேடரின் மிக்க செய்கைத்
> திண்ணன்விற் பிடிக்கின் றானென்
> றூடியல் துடியும் சாற்றி
> அறைந்தபேர் ஓசை கேட்டு
> மாடுயர் மலைகள் ! ஆளும்
> மறக்குலத் தலைவர் எல்லாம்.

இதிலே சேடர் என்பதற்கு அறிஞர் என்று பொருள் கொண்டாலும்சரி; ஆதிசேடன் என்றுபொருள் கொண்டாலும் சரியே. தன்னூரில் மட்டும் அல்ல, வெளியூரிலும் இளம்பொழுதிலேயே இவ்வளவு புகழ்பெற்றிருப்பது எவ்வளவு அருமை. அத்தகையாரை யாரினும் அருமையாகப் பொன்னேபோல் போற்றிக் கண்ணேபோல் கருத்தாக வளர்த்ததற்குச் சொல்லவேண்டுமா?

அவர் விற்றொழிலில் எத்துணை மேன்மை அடைந்திருந்தனர் என்பதை அவர் ஆடிய கன்னி வேட்டையினின்றுமே அறியலாம். வேடர்களே

> வேடர்தம் கரிய செங்கண்
> வில்லியார் விசையிற் குத்த

மாடிரு துணியாய் வீழ்ந்த
வராகத்தைக் கண்டு நாணன்
காடனே இதன்பின் நின்று
காதங்கள் பலவந் தெய்த்தோம்
ஆடவன் கொன்ருன் அச்சோ
என்றவர் அடியிற் ருழ்ந்தார்.

என்று புகழ்வதாகச் சேக்கிழார் கூறுகின்ருர். திண்ணனுர் செவ்விதி னறிந்த வேட்டை விரகினை எல்லாம் தெய்வத் திருவருளால் அறிந்துணர்ந்து அழகுபடக் கூறுவதனைச் சிறிது போக்கிச் சொல்லுவோம். திண்ணனுர் வேட்டைக்குப் புறப்படும்போது ஒவ்வொரு வீட்டினரும்உவந்தொரு திருவிழாச் செய்வதுபோலக் கொண்டாடி மகிழ்ந்து சூழ்ந்து மொய்த்துக்கொள்வதும், வேடர்களில் மேனிலையடைந்த கடவுட் பொறையாட்டியாகிய காலங்கண்ட கிழவியே இவரை இறந்தோர் இருந்தோர் எல்லோரினும் ஏற்றமிக உடையாராக ஏத்தி வாழ்த்துதலும் எடுத்தெழுதத் தக்கனவாம்.

பல்வேறு வாளிபுதை பார்த்துடன் போத ஏவி
வில்வேட ராயத்துடி மேவி ஒலிக்கும் முன்றிற்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறும் துதைந்து விம்ம
வல்லேறுபோல் வார்அடல் வாளி தெரிந்து நின்ருர்.

மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதிற்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
தேனற்றசை தேறல் சருப்பொரி மற்று முள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள்.

நின்றெங்குமொய்க் கும்சின வேடரை நீக்கிப் புக்குச்
சென்றங்கு வள்ளல்திரு நெற்றியிற் சேடை சாத்தி
உன்றந்தைதந் தைக்கும்இந் நன்மைகள் உள்ள அல்ல
நன்றும்பெரி துன்விறல் நம்மள வன்றி தென்ருள்.

இன்னும் அவர்வேட்டையில் சிறந்துவிளங்கியதை அவ் வேட்டையே நன்கு விளக்குகின்றது. இவர் ஓடிவந்து பன்றியைக் கொன்றமையை நாணனும் காடனும் புகழ்ந்தமை கண்டோம். அஃது எத்தகைய பன்றி? எவ்வளவு விசையில் ஓடுவது?

இவ்வகைவரு கொலைமறவினை
எதிர்நிகழ்வழி அதிரக்
கைவரைகளும் வெருவுறவிடை
கானெழுவதோர் ஏனம்
பெய்கருமுகி லெனஇடியொடு
பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலைகளை அறநிமிர்வுற
முடுகியகடு விசையில்.

போமதுதனை விசையுடன் ஓடிச் சென்று குத்திக் கொன்ருர். கைவில்வேலேந்திக் காற்ருெடு காற்ருய்ப் பறக்கும் கருவரை என விரைவொடும் சென்ருர் என்கின்ருர் சேக்கிழார்.

"கருவரைஒரு தனுவொடுவிசை
கடுகியதென முனைநேர்
குரிசில்,".

என்பது காண்க.

வேடர்கள் கண்ணப்பரை எவ்வளவு பெருமையாகவும் அன்பாகவும் பாராட்டி வந்தனர் என்பதை அவர்கள் வாய்ப்பிறப்பாகவே சேக்கிழார் விளக்குகின்ருர். நாகன் கிழவனுய்ப்போகவே தன் பிள்ளையை அவ்வேடர்களுக்கு அரசனுக்கப் போவதாக அவர்களிடம் சொன்னுன். அவர்கள் உடன்பட்டு மகிழ்ந்தனர். இப்பொழுதே முடிகட்டும் என்று பறந்தார்களாம்.

இத்தனைகா லமுநினது சிலைக்கீழ் தங்கி
இனிதுண்டு தீங்கின்றி இருந்தோம் இன்னும்
அத்த! உன தருள்வழியே நிற்ப தல்லால்
அடுத்தநெறி வேறுளதோ அதுவே அன்றி
மெய்த்தவிறல் திண்ணனைஉன் மரபிற் சால
மேம்படவே பெற்றளித்தாய் விளங்கும் மேன்மை
வைத்தசிலை மைந்தனைஈண் டழைத்து நுங்கள்
வரையாட்சி அருள்என்ருர் மகிழ்ந்து வேடர்.

இவ்வாறு அறிவு அகன்று வந்ததுபோல அன்பும் அகன்று வந்தது. நக்கீரர் கண்ணப்பரைக் கொலை நெஞ்சு படைத்த கொடியராகவே கூறுகின்ருர். சேக்கிழாரோ இரக்கம் உடையவர் என்பதை எடுத்துக் காட்டுகின்ருர். சிறுபொழுதிலேயே கட்டிற் சிக்கிக் கலங்கும் நாய்களை அறுத்துவிட்டு அவை விரும்பியபடி திரிய விடுவாராம். அது ஒரு குறுநடைக் குறும்பு என்கின்ருர் சேக்கிழார். என்ருலும் அதில் இரக்கம் இல்லை என்று சொல்ல இடம் இல்லை. இது வீட்டு விளையாட்டு; தெருவிளையாட்டு. இனிச் சிறு பிள்ளையாகிக் காட்டில் போய் விளையாடினபோது காடுவாழ் விலங்குகளை எல்லாம் கணக்கு வழக்கில்லாதபடி பிடித்துவந்து அவற்றை அன்போடும் ஆர்வத்தோடும் வளர்த்து வருவாராம்.

துடிக்குற டுருட்டி யோடித்
தொடக்குநாய்ப் பாசஞ் சுற்றிப்
பிடித்தறுத் தெயினப் பிள்ளைப்
பேதையர் இழைத்த வண்டல்
அடிச்சிறு தளிராற் சிந்தி
அருகுறு சிறுவ ரோடும்
குடிச்சிறு குரம்பை எங்கும்
குறுநடைக் குறும்பு செய்து.

அனையன பலவும் செய்தே
ஐந்தின் மேலான ஆண்டின்
வனைதரு வடிவார் கண்ணி
மறச்சிறு மைந்த ரோடும்
சினைமலர்க் காவு ளாடிச்
செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப்
புறச்சிறு கானிற் போகி.

கடுமுயற் பறழி னோடும் கானவ னத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய் கொடுஞ்செவிச் சாப மான
முடுகிய விசையில் ஓடித் தொடர்ந்துமுன் பற்றி முற்றத்
திடுமரத் திரளிற் கட்டி வளர்ப்பன எண்ணி லாத.

தந்தையிடத்தும் தமது பழங்குடியினிடத்தும், அவர் வைத்திருந்த பற்றினைச் செவ்வனே விளக்குகின்ருர் சேக்கிழார்

'தந்தைநிலை யுட்கொண்டு'' என்ற செய்யுளைக் காண்க, இன்னும்

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுகுறளைகள் மிசைபடுகொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அலையார்
கொடியனஎதிர் முடுகியுமுறு கொலைபுரிசிலை மறவோர்.

என்று இவ்வாறு அவருக்கிருந்த பேரிரக்கத்தினை வேட்டையாடும்போது சேக்கிழார் காட்டிவைக்கின்ருர். குட்டிகளையும் கன்றுகளையும் கொல்லாது விட்டதனுலும், கருவாய் இருக்கும் காட்டுவிலங்குகளுக்குக் கடுகளவும் துன்பம் செய்யாது காத்ததனுலும் அவரது அன்பின் ஆழத்தை நாம் அறியுமாறு சேக்கிழார் செய்கின்ருர். அவ்வாறு அகன்ற அன்புக்கு எல்லை காளத்திமலையன்றி வேறெது?



இனி அவரது அழகோ? கண்ணப்பனுரது வடிவும் உருவும் கண்டோர் நடு நடுங்குமாறு அமைந்திருந்தன என இழிவாக எழுதிவைத்தார் நக்கீரர். சேக்கிழாரோ பெற்ருேரையும் உற்ருேரையும் தமது பேரழகால் கொத்தடிமையாக்கிக் கொண்டார் எனக் கூறிப் பெருமை பேசுகின்ருர். வேடர் குடியில் பிறந்த வள்ளியம்மையார் பெண்களில் எவ்வாறு தலைசிறந்த வடிவழகுடையவரோ அவ்வாறே ஆண்களில் சேக்கிழாரது கண்ணப்பரும் தலைசிறந்த வடிவழகுடையவர் எனலாம். வேடர்கள் எல்லோரும் அழகற்றவர் என்று ஏன் கொள்ளவேண்டும்? சிறிது கறுப்பாக இருக்கலாம். மாமைநிறம் கொண்டாடப் படவில்லையா? கண்ணபிரான் கறுப்புத்தானே. ஆனுல் அவரினும் அழகுடையார் யார்? கண்ணபிரானைப்போலக் கண்ணப்பரையும் இதற்குமுன் எவரும் கண்டறியாததோர் கண்கவரும் முழுவழகுடையவராக்கினுர் சேக்கிழார். அத்தகையார் எல்லோராலும் பாராட்டப்பட்டார் என்பதைக் குறிப்பது ஒரு புறம் இருக்கச்சேக்கிழார் கொண்டாடுவதுபோலக் கண்ணப்பரை வழிபடு கடவுளாகத் தொழுவாரது மனதிற்கு இவ்வாறு புகழ்வது பிடித்தமாக இருக்கின்றது. நல்ல உருவையும் வடிவையும்தான் நமது உள்ளமும் நாடுகின்றது. நாம் எல்லோரும் திண்ணனுரது தெய்வத்திருவுருவை மனக்கண்ணுல் நாடிக் கண்டு வழிபட்டு மகிழ்வதற்காகவே அவரது வடிவை ஓடாவி ஒருவன் தீற்றுவதுபோல ஒன்றும்விடாமல் சேக்கிழார் எழுதி வைக்கின்ருர். இவ்விடத்திலே நமது புலவர்பெருமான் தாம் ஓர் பாவலர் என்பதை மறந்து கைதேர்ந்த ஓடாவியாகி விடுகின்ருர். குறிப்பால் பொருளை விளக்கிச் செல்வதே பாவாணரது தொழில். ஒன்றும் விடாது உருவும் வடிவும் மனங்கொள்ள வரைந்துபோதல் ஓவியக்காரனது தொழில். இங்கே சேக்கிழார் ஓடாவியினது தொழிலைத் தமது பாட்டிலே காட்டிப் போகின்ருர்.

T. P. மீனுக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 35.

## நள வெண்பா

(669-வது பக்கத் தொடர்ச்சி)

### கலிதொடர் காண்டம்.

சந்தக் கழற்ரு மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்ருய் வழியான தெல்லாம்
கடந்தோமோ வென்ருர் கலுழ்ந்து. 61.

பதப்பிரிவு:—சந்தம் கழல் தாமரையும் சதங்கை அணி பை தளிரும் நோவ பதைத்து உருகி எம்தாய் வடம்தோய் களிற்ருய் வழி ஆனது எல்லாம் கடந்தோமோ என்ருர் கலுழ்ந்து.

பதவுரை.

சந்தம் - அழகிய
கழல் - வீரகண்டை யணிந்த
தாமரையும் - தாமரை மலர்போன்ற (மகனின்) பாதங்களும்,
சதங்கை - சலங்கையை
அணி - அணிந்த
பை - பசுமையான
தளிரும் - தளிர்போன்ற (மகளின்) பாதங்களும்
நோவ - வலியெடுத்ததினுல் (அவ்விருமக்களும்)
பதைத்து - உடல்துடித்து
உருகி - மனங்கரைந்து;
கலுழ்ந்து - அழுது
"எம்தாய் - எங்கள் தாயே,
வடம் - கயிறு
தோய் - அழுந்திய (கழுத்தையுடைய)
களிற்ருய் - யானைகளையுடைய தந்தையே,
வழி - வழி
ஆனது - என்று சொல்லப்படுவது
எல்லாம் - முழுவதும்
கடந்தோமோ - கடந்து விட்டோமோ"
என்ருர் - என்று கேட்டனர்.

விரிவுரை:—உற்றது இன்னதென்று செவ்வனே உணராத இச்சிறு மக்கள் தம் பெற்ருேரைத் தொடர்ந்து சென்றபோது நகரின் எல்லையைத் தாண்டுகின்ற வரையில் நாற்புறமும் பார்த்துக்கொண்டு போயிருப்பார். யானையிலும் குதிரையிலும் தேரிலுமே இதுகாறும் உலவிவந்த இப்பாலகர் இன்று நடப்பதெனும் புதுமையில் சிறிது ஊக்கம் முதலில் கொண்டிருப்பினும் இருக்கலாம். ஊரின் எல்லையைச் சேர்வதன்முன் அவர்கள் கால் சற்று நோவ ஆரம்பித்திருக்கு மென்பதற்கும் ஐயமில்லை. காட்டினிற் புகுந்து கொஞ்சதூரம் போவதற்குள் காலின் வலி மிக, இந்நடை இனிப் போதும் என அயர்ந்திருப்பார். ஆனுல், பெரியோருடனேகும் பிள்ளைகள் ஒருபோதும் தமக்குக் கால் வலிக்கின்றதென்று சொல்ல மாட்டார். இது சிறுவர் குணம். எனவே, மெல்லமெல்லத் தம் தந்தையையும் தாயையும், "நாமிப்பொழுது எங்குப் போகின்ருேம்" என்று இடை இடையே வினவத் தலைப்பட்டிருப்பர். பெற்ருேர் அவர்களைப் பரிவினேடும், "குழந்தைகாள் உங்கள் கால் நோகின்றனவோ" எனக் கேட்டாலும் அவர்கள், "இல்லை இல்லை நெடுந்தூரம் நடக்க எம்மால் இயலுமே. போகின்ற இடம் எதுவென்று அறிந்து கொள்ளக் கேட்டோம், அவ்வளவே, வேறென்!" என மறுத்து மேல் நடப்பவராய், மீண்டும் மீண்டும் "எங்குப் போகின்ருேம், அதைச் சொல்லுங்கள்" என வேண்டுவாராவர். இச்சிறுவர்க்குத் தாம் எங்குப்போவதாகச் சொல்வர் பாவம், நளனும் .தமயந்தியும். குறியேது. அடைகின்ற இடமென்று ஒன்று எங்குளது! ஆதலால், "மக்காள், நாம் இவ்வழியே போகின்ருேம்" என்றுதான் அவர்களுக்குக் கேட்குந்தோறும் சொல்லிக் கொண்டு வந்திருப்பர். காலோ வலிக்கின்றது, 'வழியே போகின்ருேம்' என்ருலோ இவர்களுக்கு விளங்கவில்லை. அடவியூடு இவர்நடக்கும் வழி முடிவதாகக் கண்ணிற்குத் தென்படும் இடம் சேர்ந்துவிட்டால் தம் பயணம் முடிந்ததென்று தேறியிருப்பார். ஆனுல் முடிவதாக எண்ணிய இடத்தை அடைந்ததும் அவ்வழி இன்னும் முன்போக, இவ்விரு மக்களும் ஆற்ருராகி இனியோர் அடிபெயர்க்க இயலாமல் தாயையும் தந்தையையும் நோக்கி, "வழியே போகின்ருேம்,வழியே போகின்ருேம், என்று காட்டிக்கொண்டு வந்தீர்களே, அந்த வழி எனப்படுவது முழுவதும் கடந்தொழிந்தோமோ, கூறுங்கள்" என உருக்கமாய் வினவி அடக்கமாட்

டாது அழுதும்விட்டனர் என்பதைப் புகழேந்தி இச் செய்யுளில் மிகவும் நயமாகக் கூறியுள்ளார்.

எந்தாய், என்பதை ஒரேசொல்லாக எடுத்துக் கொண்டால், 'தந்தையே' என்று அழைப்பதாகப் பொருள்படும். அப்பொழுது, 'தந்தையே, வடம் தோய்ந்த கழுத்துடைய யானைகளுடையானே' என்று இம்மக்கள் நளனைமாத்திரம் அழைத்து, 'வழி ஆனது எல்லாம் கடந்தோமோ' எனக் கேட்டதாகும். எந்தாய், என்பதை, எம்+தாய் எனப்பிரித்தால் 'எங்கள்தாயே' என்று முதலில் தமயந்தியை அழைக்க அவள், இச்சிறுவர்படுந் துயரைக் காணச் சகியாளாகித் தரையை நோக்கி நிற்கவே, இம்மக்கள் பிறகு தம் தந்தையை வினவினரென்று ஊகிப்பதற்கு இடமுளதாதலால் இப்பொருளே இயற்கை நயமுடையது. "யானைகள் பல இருக்க இந்நாள் நாம் கால்நடையாய்ப் போவதேனோ" என்னும் நினைவால் நொந்தனர் இச்சிறுவர் என்பதும், "வடந்தோய் களிற்றாய்" என்றழைப்பதால் தெரிகின்றது.

தூயதன் மக்க டயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதும்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து. 62

கருத்து :—ஒன்று மறியாப் பேதைகளான தன் மக்களின் துயரத்தையும், இந்நிலைக்கு இவர்களைக் கொண்டுவந்த விதியின் கொடிய மாயத்தையும், எதுவரினும் செம்மையே செய்வதென்று துணிந்திருந்த நளன் நோக்கி, வருத்தத்தால் வாட்டமுற்று 'வழியானதெல்லாம் கடந்தோமோ' என்றுகேட்ட மக்களுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் சித்திரத்தைப்போல் நின்றுவிட்டான்.

## இலக்கணம்.

ஒன்றன் பெயரை இதுவென்று கூறிக் குறிப்பதற்கு நிற்குஞ்சொல் பெயர்ச்சொல் என்பதை முன்னரே கூறி இருக்கின்றோம் (பக்கம், 190). வினைச்சொல்லைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவை பல இருப்பினும், பெரும்பான்மை முற்றுவினை எச்சவினை எனும் பாகுபாட்டையே நாம் முக்கியமாய்க் கற்றதுபோலவே, பெயர்ச்சொல் இலக்கணத்தில் முக்கியமாய் வேற்றுமையைப் பற்றிக் கற்போம்.

வேற்றுமை என்றால் வேறுபடுதல் அல்லது மாறுபடுவது என்பது அர்த்தம். சொல்லவருகின்ற விஷயத்திற்கேற்றபடி பெயர்ச்சொல் வேறுவேறு விதமாக மாறிப் பொருளைப் பேதப்படுத்த வேண்டுவது வாக்கியத்தின் அமைப்பிற்கு அவசியம். மரம், என்பது ஒரு பெயர்ச்சொல். மரம் வளரலாம், ஒருவன் மரத்தை வெட்டலாம், மரத்தால் பெட்டி செய்யலாம், மரத்திற்கு நீர் விடலாம், மரத்தினின்று பழம் உதிரலாம், மரத்தினுடைய கிளைகளைப்பற்றிக்கூறலாம், மரத்தில் பறவைகள் இருக்கலாம், மரமே என்று அதைப்பார்த்து அழைக்கலாம். ஆதலால் மரம் என்ற சொல், தானேவளர்கின்ற காரியத்தைச்செய்வதாயும், அழிக்கப்படுவதாயும், வேறொன்று செய்யப்படுவதற்குக் கருவியாயும், அதற்கு ஒன்று கொடுக்கப் பெறுவதாகவும், அதனிலிருந்து ஒன்று நீங்குவதாயும், கிளைகளை உடைத்தாயிருப்பதாயும், அதனிடத்தில் ஒன்று இருப்பதாயும், கூப்பிடப் படுவதாயும், எட்டுவிதமாகப் பொருள் மாறிவருகின்றதல்லவா. இப்படி மாறிவரும்போது அது வேற்றுமை அடைகின்றதென்று சொல்வர்.

தமிழில் இருப்பன எட்டுவேற்றுமைகள். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை, என்று வரிசையாக அழைக்கப்படும். பின் தொடரிலக்கணமும் அதனிலிருந்து புணரிலக்கணமும் கற்பதற்கு இந்த எட்டு வேற்றுமைகளையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

முதல்வேற்றுமை:—தச்சன் பெட்டியைச்செய்தான் என்பதில் தச்சன் என்பது முதல்வேற்றுமையிலிருக்கின்றது. சாதாரணமாக வாக்கியத்தில் எழுவாயாயிருப்பனவெல்லாம் முதல் வேற்றுமைச் சொற்கள். ஒரு காரியத்தைச்செய்கின்றது இது வென்று குறிப்பது முதல் வேற்றுமையில் இருக்கும் சொற்கள் என்கிறவரையில் இப்பொழுது தெரிந்து கொண்டால் போதும். வடமொழியில் பிரதமா விபக்தி என்று சொல்வதும், ஆங்கிலத்தில் Nominative case என்பதும் தமிழில் முதல் வேற்றுமைக்கு நேராகும். 'நாய் குலைத்ததால் சிறுவன் பயந்தான்,' என்றதில் குலைக்கின்ற காரியத்தைச் செய்கின்ற நாய், பயப்படுவதைச் செய்கின்ற சிறுவன், என்னும் சொற்கள் முதல் வேற்றுமையில் இருக்கின்றன.

இரண்டாம் வேற்றுமை. ஒரு காரியத்தைச் செய்யும் பொருளைக் காட்டுகின்ற பெயர்ச் சொற்கள் முதல் வேற்றுமை. இனி, செய்யப்படுகின்றது இது வென்று காட்டினால் இரண்டாம் வேற்றுமை ஆகும். தச்சன் பெட்டியைச் செய்தான். செய்பவன் தச்சன் ஆகையால் அச்சொல் முதல் வேற்றுமை. செய்யப்படுவது பெட்டி, ஆகையால் பெட்டி என்பது இங்கு இரண்டாவது வேற்றுமையில் இருக்கின்றது. செய்பவனைக் காட்டுகின்ற முதல் வேற்றுமைச் சொற்கள் தம் உருவம் மாறாமல் அப்படியே நிற்கும். தச்சன் என்பது அப்பெயர்ச்சொல்லின் இயற்கை உருவம். காரியத்தைச் செய்பவன் தச்சனாக வரும்போது, தச்சன் பெட்டியைச் செய்தான் என, அப்படியே தச்சன் என்பது தச்சன் என்னும் உருவத்தோடேயே நிற்கும். ஆனால் செய்யப்படும் பொருள் பெட்டி. அது செய்யப்படும் பொருள் என்பதற்கு அடையாளமாக பெட்டியை என்று மாறி விடுகின்றது. ஐ என்று ஒரு எழுத்துச் சேர்வதால் பொருளிலும் உருவத்திலும் இந்த மாறுபாடு ஏற்படுகின்றது. இப்படி வேற்றுமைப் படுத்த வருகின்றவைகளுக்கு உருபு என்று பெயர்.

செய்யப்படும் பொருளைக் குறிக்கின்ற இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமாக வருகின்ற உருபு ஐ. மான் காட்டில் மேய்ந்தது, என்பதில் மேய்வதாகிய காரியத்தைச் செய்த மான் என்னும் பெயர்ச்சொல் முதல் வேற்றுமை. அது உருவம் மாறவில்லை. மாறவும் முடியாது. வேடன் மானைப் பிடித்தான், என்பது சொல்ல வேண்டிய விஷயமானால், பிடிப்பதாகிய காரியம் செய்யப்படுவது மான் ஆதலால், அது ஐ என்னும் உருபு பெற்று மானை என்று இரண்டாம் வேற்றுமைக்கு மாறிவிடுகின்றது. 'வேடன் மான் பிடித்தான்', என்று வைத்துக்கொள்வோம். அல்லது தச்சன் பெட்டி பண்ணினான்', என்று வைத்துக்கொள்வோம். இவ்விரண்டு உதாரணங்களிலும், மான், பெட்டி, என்பன ஐ என்னும் இரண்டாம் வேற்றுமைக்கு அடையாளமான உருபைப் பெறாமற்போனாலும், பொருளை நோக்கினால் அவை இரண்டாம் வேற்றுமை. மான் (+ஐ', பெட்டி (+ஐ), என்று ஐ என்னும் அடையாள உருபு தென்படாமல் மறைந்திருக்கின்றது. வேற்றுமை உருபு மறைந்திருந்தால் வேற்றுமைத் தொகை என்றும், தோன்றியிருந்தால் வேற்றுமை விரி என்றும் சொல்வர். வேடன் மானைப் பிடித்தான். தச்சன் பெட்டியைச் செய்தான் இவள் முகம் சந்திரனை ஒக்கும். என்றெல்லாம் வரும்



போது, மானை பெட்டியை சந்திரனை என்னும் சொற்கள் இரண்டாம் வேற்றுமை விரி, வேடன் மான் பிடித்தான். தச்சன் பெட்டி செய்தான். இவள் முகம் சந்திரன் ஒக்கும். என வரும்போதும் அவை இரண்டாம் வேற்றுமையே. ஆனால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

இந்தச் செய்யுளில் 'செம்மை புரிவான்' என்று வந்திருக்கின்றது. புரிதல் என்றால் செய்தல் என்பது அர்த்தம். புரிவான், என்பது புரிகின்றவன் என்னும் பொருளில் வந்திருக்கின்றது. வினையாலணையும் பெயர். புரிகின்றவன் இவன் என்று சொல்வதால் அது முதல் வேற்றுமை. இவனால் புரியப்படுவது செம்மை. ஆகையால் செம்மை என்னும்சொல் இங்கு இரண்டாம் வேற்றுமை. ஆனால் ஐ உருபு இல்லை. ஆகையால் அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. செம்மை, என்பதில் கடைசி எழுத்து மை இல் உள்ள ஐ வேற்றுமை உருபல்ல. கருமை பெருமை என்பனபோல செம்மை என்பதே பண்புப்பெயர். இதனுடன் இரண்டாம் வேற்றுமை உருபு சேருமானால் செம்மையை என்று ஆகும். ஆதலால் 'செம்மை புரிவான்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இது விரிந்துவருமானால் 'செம்மையைப் புரிவான்' என்று ஆகும். இவ்விதமே தலை, கை, என்பன ஐ என்று முடிந்தாலும் இரண்டாம் வேற்றுமையல்ல. 'அவன் தலை பெரியது', 'அவள் கை நீண்டது', என்னும்போது தலை கை என்பன முதல் வேற்றுமையே. அவன் தலை ஆட்டினான்', 'அவள் கை நீட்டினாள்' என்றால், அச்சொற்கள் இரண்டாம் வேற்றுமைத் தொகை. விரிந்தால், "தலையை ஆட்டினான்" "கையை நீட்டினாள்" எனவரும்.

# பிளாதன்

## (Plato, a study)

[ 673 - வது பக்கத் தொடர்ச்சி ]

புராதன ஞானிகளும் ஸோக்ரதனும் பிரபஞ்சத்தைப் பற்றிப் பின்வருமாறு சித்தாந்தப் படுத்தினர் :—ஓர் பக்கத்தில் நாமும், நமக்குப் புறம்பே எதிராக உலகாதிகளுமுள. புலன் புத்திகளின் மூலமாக இவ்வுலகாதிகளை உள்ளபடிக்கு நாம் உட்கிரஹிக்கின்றோம். உண்மை என்பது மனத்தின் தொழிலுங் குணதிசயமுமாகும். வெளி விஷயங்களையும் நிகழ்ச்சிகளையும் தோற்றங்களையும் அதிகமாக நாம் தேடித் துருவிக் கவனிக்க வேண்டியதில்லை. ஆத்தீர ஆலோசிப்பவர்க்கு நல்வாழ்க்கை, தீ நடத்தை இவைகளின் குணதிசயங்கள் தெளிவாக விளங்கும். தெளிவும் பொருத்தமுமான உள்ளாராய்ச்சி, அல்லது சுயவிசாரிப்பே வாழ்க்கையின் ஆதர்சமாவது. இத்துணிபை நமது பிளாதன் அடியில் வருமாறு திருத்திப் பெருக்கினர்:—மனம் என்பது புறப்பொருட்களைப் பிரதிபலிக்கச் செய்யுங் கண்ணாடிபோன்ற ஓர் கருவியல்ல வானாலும் (மனமில்லாது புறப்பொருள்கள் அறியப் படுவனவல்லவானாலும்) மனத்தி னியக்கத்தினின்றே உண்மை புலப்படுவதாயினும், புறப்பொருள்கள், அல்லது, காட்சியுலகின் வழியாகத்தான் அவ்வுண்மை உறுதி பெற்றுத் திகழ்வதென்ற விஷயத்தையும், புறவிஷயங்களாகிய நிகழ்ச்சிகளில்லாமல், சுயமாகவே, உண்மையைப் பற்றிப் பாவித்து விசாரித்துச் சித்தாந்த மேற்படுத்தற்கான சக்தி பொருந்தியதல்ல மனம் என்பதையும் நாம் நன்கு கவனிக்கவேண்டும். ஞானமும் ஞேயமும் மெய்யே, அல்லது மெய்யின் அம்சங்களே; அவ்விரண்டிற்கும் பிரிக்கக்கூடாத சம்பந்தமுண்டு; ஆனால், பின்னதில் மலினம் படிந்து நிற்கின்றது. இதை அறிந்து உயர்தலே ஞானம்.

நீதி யாதென்பதைப்பற்றி நாம் அறிய விரும்புவதாகப் பாவித்துக் கொள்வோம். நீதிபொருந்திய விஷயம் சொல் செயல்களையெல்லாம் தேடித் துருவி ஒருங்கு சேர்த்துப் பார்த்து, அவைகளுக்குப் பொதுவான குணதிசயத்தைத் தெளிந்தெடுத்து, முரணானவைகளை நீக்கி, இவ்வாறு அதிதீர்க்க ஆராய்ச்சியால் கிடைக்கப்பெற்ற தெளிவும் பொருத்தமும் பொருளுமுற்ற முடிபே ஒவ்வொரு விஷயத்தின், அல்லது குணத்தின் இலக்கணமெனக் கொண்டு, அம்முடிபுகளுக்கு வந்தவுடன், இது நீதி - அறம், அது அநீதி - மறம், என அறிந்து, தக்கவைகளைக் கைக்கொண்டு, தகாதவைகளைத் தள்ளி வாணாளைச் செலுத்தவேண்டும். இதுவே ஸோக்ரதனின் முறையாகும். இம்முறையை ஆராய்ந்து விசாரித்துப் பார்த்தபொழுது, பிளாதனுக்குத் தோன்றியன பின்வருமாறு :—மெய்ந்நீதி, (கலப்பற்ற சுத்த நீதி) உண்மையில், பரிபூர்ணமாக நம்முடைய சொல் செயல்களில் விளங்குவதில்லை. நீதி - நியாயம் - நன்மை - இன்பம் - தர்மம் - அழகு என்பவைகளைப் பற்றிய நம்முடைய உள்சிந்தனை, அல்லது லக்ஷியம் எச்செயலிலும் எப்பொழுதும் அரையுங் குறையுமாகவே தோன்றி வருகின்றது. சுயவறிவு, அல்லது நுட்பபுத்தியால் உணரப்பட்டவைகளுக்கும் தோற்றங்களுக்கும் என்றுன்றும் பேதம் இருந்தே வருகின்றது. இன்னமும், ஒரு விஷயத்தைப் பற்றி ஆராயப்புகுந்து, பொருத்தமுற்றவைகளைக் கொண்டு, அற்றவைகளை விடுத்து வருவதைக் கவனிக்கையில், நம்முள்ளேயே அவ்விஷயத்தைப் பற்றிய நிஷ்களங்கமாய் முற்றிய அறிவு இருப்பதாகவும், இஃதுடன் நம்முடைய சொல் செயலநுபவங்களை ஒத்திட்டுப் பார்த்து, இது சரியானது, அது பிழை செறிந்ததென முடிப்பதாகவும் உணர்கிறோம். சுருக்கத்தில், தர்மம், அல்லது நீதியைப்பற்றிய முற்றறிவு என்பது மலினக் கலப்பற்ற அநுபவங்களி னின்றுண்டாவதல்ல; ஏனெனில், அநுபவ உலகத்தில், அத்தகைய சீரிய தர்மத்தைக் காண்பதில்லை. பல்வேறு அநுபவங்களின் சாராம்சமே முற்றறிவு, சீரிய எண்ணம், அல்லது உயரிய லக்ஷியமெனின், இதுவும் பிழையாகும்; ஏனெனில், உயரிய தர்ம அறிவு என்பது அநுபவங்களுக்கு அதீதமானது; லக்ஷியமென்பது சிந்தனை சொல் செயல்களுக் கெல்லாம் அப்பாலுளது. இவ்வாறாயின், எங்கிருந்து, எவ்வாறு, நிர்மல நிச்சய நித்திய தர்மஞானம் எழுகின்றது? நம்முடைய அநுபவங்களுக்கெல்லாம் அப்பாலான அநுபவங்களின் அடிப்படையும் உள்ளீடுமான பரவஸ்து, அல்லது சத்தினின்றே உண்டாகிறது போலும். இன்னமும், குழந்தையினிமித்தம் தன் உயிரை அளிக்க முன்வரும் தாய், சுதேசத்தின் ரக்ஷிப்புக்காக மரிக்கும் வீரன், தன் கொள்கை அல்லது ஆதர்சங்களுக்காகத் தன் உயிரைப் பரிகொடுக்கும் ஞானி, இம்மூவருடைய செயல்களும் சமப் புகழ்ச்சிக் குரித்தானவையன்றோ? அவைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தன ; அதாவது, அவைகள் சம்பூர்ண நன்மையின் பல தோற்றங்களாவன. இன்னமும், ஓர் உன்னத கட்டிடம், கம்பீரச்சிலை, வரகவியின் இனிய பாடல், சௌந்தரிய மானுடவுருவம், ஆகியவைகளைக் கவனித்து, ஒன்றை மற்றவைகளுடன் ஒத்திட்டுப் பார்ப்போமாயின், புறத்தே வித்தியாசங்கள் தோன்றினும், யதார்த்தத்தில் அவைகளெல்லாம் பொதுவாக எழிலையே அடிப்படையாகக் கொண்டிருப்பதை அறிவோம். இன்னமும், மாந்தருலகை உற்று நோக்குங்கால், வெளிக்கு எவ்வளவோ வித்தியாசங்கள் காணப்படினும், அவர்களுக்குப் பொதுச் சுவபாவமாகத் தோன்றும் குணநடத்தைகளினின்று மானுடத்தன்மையை உணர்கிறோம். இன்னமும், இவ்வுலகாதிகளி லொவ்வொன்றும் நகர்ச்சி இயக்கம், அல்லது ஓட்டம், நிலை, தோற்றம், மறைவு, வளர்ச்சி தேய்வு, ஒற்றுமை வேற்

றுமை என்பனவாதிகளுக்குட்பட் டிருக்கின்றது. இவ்வாறு, குண நடத்தைகள் நிகழ்ச்சிகள் காட்சிகள் அநுபவங்கள் முதலானவைகளுக்கு அடிப்படையாக, அல்லது பொதுவாக உள்ளவைகளையே தேர்ந்தெடுத்து, முன்னவை பின்னவைகளின் பல்வேறு தோற்றங்களெனக் காட்டியிருக்கின்றனர். தர்மநடத்தைகள் தர்ம அறிவையும், இனிய காட்சிகள் இனிமை யறிவையும், சத்விஷயங்கள் சத்தைப்பற்றிய அறிவையும் ஒருவாறு, இவ்வுலகில், பிரதிபலிப்பிப்பன வாம். இதுவே இவருடைய பெயர்பெற்ற மூலதத்வங்களினறிவு (Doctrine of Ideas) என்பது.

"நமக்குப் புறத்தே யுள்ளவைகளைத் தெரிவிப்பனவாகிய புலனுணர்ச்சிகளே (Sense Perceptions) நம்பத்தக்கன, மெய்யானவை" என்ற வாதத்தைக் கண்டித்து, புலனுணர்வுகளுக்கும் மேலான பொது அறிவு, அல்லது உள்ளுணர்வுகளே (General notions or concepts) உண்மைகள் (Realities) என்று அறிவுறுத்துவன. இவ்வுள்ளுணர்வுகளால்சிந்தாந்தப்படுத்தப்பட்டவைகளையே இவர் மூலதத்வங்கள் (Ideas) எனப் பெயரிட்டனர். புலனுணர்ச்சிகளும் புறப்பொருள்களும் (Natural objects) எவ்வாறு சம்பந்தித்து நிற்கின்றனவோ, அவ்வாறே உள்ளுணர்வுகளும் அம்மூல தத்வங்களும் சம்பந்தித்து விளங்குகின்றன; அதாவது ஒன்று மற்றவைகளுக்குத் தோற்றக்காரணமாவது. சதாகாலமும் இயங்கி மயக்குவிக்கும் கேவலப் புலனுணர்ச்சிகளால் உணரப்பட்டவைகளையே மெய்ப் பொருள்களென மருண்டு, சர்வத்திற்கும் மேலான தெய்விக "தேவதூதர்கள்" போன்ற உள்ளுணர்வுகளால் ஊகித்துக் கிரஹிக்கப்பட்டவைகளை மித்தையென ஒதுக்குங்குணம் என்னே! சதாகாலமும் மாறித் தேய்வதும் தோன்றி மறைவதுமாகிய உலகாதிகளையும் புலனுணர்ச்சிகளையும் உண்மையெனக் கொள்வோமாகில், அதுபோலவே, அவற்றிற்கும் மேலான அஸ்திபாரம்போன்ற மூல வஸ்துக்களையும் உள்ளுணர்வுகளையும் பன்முறை அதிகமாக அல்லவோ விசுவசிக்கவேண்டும்? இயங்கும் பொருளை நம்புபவன் இயக்கும் சக்தியையும் நம்பவேண்டுமன்றோ? இவ்விரண்டையும் நம்புபவன் அவைகளை அறியும், அல்லது அறிவிக்கும் சக்தியையும் அங்கீகரிக்க வேண்டுமென்பதும் தெளிவாக வில்லையோ? சுருக்கத்தில், உண்மை நன்மை ஒற்றுமை இனிமையாகியவைகளெல்லாம் மெய் வஸ்துக்களேயாம். அம்மூல வஸ்துகளில்லாவிடில், உள்ளுணர்வுகளில்லாவிடில், உலகம் உலகாதிகளின் உண்மை தெளிவாக விளங்கா; இவைகளின் ஒற்றுமையும் இறுதிப்பயனும் அறியப்படா.

"உள்ளுணர்வுகளால் கிரஹிக்கப்படும் மூலவஸ்துக்களே மெய்யென்பதற்கு ஆதாரமென்னை? அக்கூற்றின் உண்மைப் பொருளென்னையோ? சுந்தர புருஷர்களைப் பார்த்து வருகிறோம்; அழகிய சிலாவிக்கிரஹங்களைக் கண்டு உவப்புறுகிறோம்; இனிய சித்திரங்களை உற்று நோக்க உள்ளம் நெகிழ்கின்றது. ஆனால், அழகு சுந்தரம் இனிமை யாகியவைகளை நாம் காண்பதில்லையே. அத்தோற்றங்களினின்று அக்குணங்களைப் பிழிந்து பிரித்தெடுத்து, இவைகளே மெய், அவைகள் பொய்யெனச் சாதித்தலில் விவேகம் என்னையோ? அல்லது, அவ்வாறு பிழிந்து பிரித்தெடுக்க முடியுமோ?" எனச் சிலர் வினவலாம், ஐயுறலாம். இவ்வினாக்களுக்கு இவர் அளிக்கும் விடை யாதெனில், மாந்தரிற் பெரும்பாலரும் தோற்றப் பொருள்களைப் பார்த்து ஏமாந்து களித்திருத்தற்கான உணர்வு உடைத்தாய், அவைகளைத் தோற்றுவிக்கும் மூல வஸ்து அகச்சக்தியை அறியத் திறனற்றிருப்பதேயாம். அகவிரிவாய உள்ளாராய்ச்சியாலும் அந்தக்கரணச் சுத்தியாலும் மூலவஸ்துக்களை ஒருவன் எளிதில் உறுதியுடன் உணர்ந்தறியலாம். "உலகாதிகளின் தன்மை இயக்கங்களினின்று மூலவஸ்துக்களின் இருப்பையும் குணங்களையும் நாம் ஊகிக்கின்றோம்; அல்லது, மூலவஸ்துக்கள் காட்சிப் பொருள்களின் பிரதிபிம்பங்களாவன," என்பது சில ஞானிகளின் சாதனையாகும். ஆனால், இவருடைய கொள்கைப்படிக்கு, மூலவஸ்துக்களே மெய்; காட்சிப் பொருள்களோ ஏறக்குறைய மலினந் தங்கப்பெற்ற பிம்பங்கள். உண்மை நேர்த்தி இன்பம் என்பனவாதிகளைப்பற்றிய உள்ளுணர்வு இல்லையாயின், இவ்வுலகில் சிதறிக்கிடந்து பதுங்கி நிற்கும் அக்குணங்களைப் பார்த்தறிய முடியாது. அம்மூல தத்வங்களின் உச்சஸ்தானமே கடவுள் பரமான்மா அகண்ட பரிபூரண சச்சிதானந்தம் என்பது. யாவும் சம்பூர்ணமாக விளங்கும் தேவலோகத்தினின்று இப்புவியில் தள்ளப்பட்ட ஜீவான்மாக்கள் இவ்வுலகாதிகளின் குற்றங் குறைகளையும் விபரீதங்களையும் பார்த்து, தம் பூர்வ நன்னிலைமையை நினைத்து வருந்தி, மீண்டும் அந்நிலைமை யெய்துதற்குப் பிரயத்தனிக்கின்றன போலும். இப்பிரயத்தனங்களில் வெற்றிபெற்றுப் பூர்வ பூர்ணஞானம் ததும்பப் பெற்றவர்களே தத்வக்ஞரெனப் படுபவர்.

பிரமாண வாதிகளின் படிக்குச் "சுந்தரம் நன்மை வாய்மை என்பன, பொருள் செயல்களினின்று பிரித்தெடுக்கப்பட்ட விசேஷ குணங்களே யல்லாமல், உண்மையில், தன்னந்தனியாக நிற்பனவல்ல, நிற்கக்கூடியனவுமல்ல; இனிய பொருள்களில்லையானால், இனிமையுமில்லை; பொருளுங் குணமும் பிரிக்கக் கூடாவண்ணம் கூடிக்கலந்து நிற்பன; ஒன்று மற்றதினின்று வேறாக நிற்க முடியாது." ஆனால், பிளாத்தனின் படிக்கு மூல அழகு என்பதே நித்யமானது; நாம் பார்த்துவரும் அழகிய பொருள்களின் தொகுதியைக் காட்டிலும் பன்மடங்கு அதிக அழகுவாய்க்கப் பெற்றது. மாறியோடுவதைவிட எப்பொழுதும் ஒருபடிக்காகவே யிருப்பது உண்மையன்றோ? காம்பீரிய புருஷன், மிக்க நேர்த்தியான சிலாவிக்கிரஹம், அதி உத்தமச் செயல்களெல்லாம், காலக்கிரமத்தில், மறைந்து மறக்கப்படுவன வல்லவோ? ஆனால், சௌந்தரியம் நன்மை உத்தம மென்பன மாறுவதுமில்லை. மறதியாகிய அகழியில் ஓடிக் குதித்து ஒளிவதுமில்லை யன்றோ? அங்கங்கள் (Individuals) அழியலாம்; ஆனால், இனம் (Type) அழிவது எக்காலுமில்லை. மாமரம் பலாமரம் மல்லிகை ரோஜாக்கள் மறையலாம்; ஆனால், மரமும் புஷ்பமும் மறைவது ஒருபொழுதுமில்லை. இன்னமும், தோற்ற வுலகில், (Phenomenal World) வியவகாரிக அறிவினாலன்றோ, (Relative knowledge) ஒன்றை அழகு நிறம்பியதெனவும், மற்றொன்றை விகாரமுற்றதெனவும், லக்ஷணம் பொருந்தியதை அற்றதுடன் ஒத்திட்டுப்பார்த்து, முன்னதை இனியதெனவும், பின்னதை விரூபமெனவும் அழைத்து வருகிறோம். இன்னமும், லக்ஷணம் என்பது, பலவழிகளில், ஏற்றக் குறைவுகளுடன் தோன்றுவது. மேலும், இற்றைஞான்று நேர்த்தியாக இருப்பது மற்றைஞான்று சீர்கெடுகின்றது. இவற்றினின்று நாம் உணர்ந்தறிய வேண்டியது யாதெனில், காட்சி உலகில், உண்மை நன்மை இனிமையாகியவை மாறிக் குறைந்து, மழுங்கி மறையு மியல்புடையன; ஆனால், அகவுலகில், ஆதியந்தங்களற்றதாய்க் குறைவு அழிவுகளுக் குட்படாததாய், சலிக்காது மாறுதலடையாது, விரிந்து நிறைந்து திகழ்வதென்பதேயாம். மூலவஸ்துக்களுக்கும் காட்சிகளுக்குமுள்ள சம்பந்தம் எதுபோலவெனின், ஒரு ஆன்மாவுக்கும் அவனுடைய புகைப்படத்திற்கு முள்ளது போன்றது. இவ்வுண்மையை யறிந்தவனே மெய்ஞ்ஞானி.

சித்துலகில், அம்மூல வஸ்துக்கள் பலதிறப்பட்டுப் பற்பல வேற்றுமைகளுடைத்தாய் நிற்பன. கீழ்த்தர மூல வஸ்துக்கள் உயர்தர வஸ்துக்களுடனும், பின்னவை இவற்றினும் உயரிய—தொல்லியவைகளுடனும், இவ்வாறு ஒவ்வொன்றும் அவ்வதற்குமேலானவைகளுடனும் இணைக்கப் பட்டிருக்கின்றன. இவ்விதம் மேலே செல்லச் செல்ல, பற்பல குணங்களின் இணக்கமும் வன்மையும் தூய்மையும் பெருகிப் பெருகி, இறுதியில் உச்சியில், மிக்க உன்னதமாய சர்வ சக்திஞானம் சத்தியம் அன்பு இனிமைகள் அடங்கப்பெற்ற பரவஸ்து, அல்லது சர்வ மங்களம், அல்லது சிவம் (The good) என்பது உளது. மூல தத்துவங்களை, ஒவ்வோர் விதத்தில், காட்சியுலகம் பிரதிபிம்பத்தைப்போல், அம்மூல தத்வங்கள் மிக்க மேலான அப்பரவஸ்துவை, வெவ்வேறு வழிகளில் பிரதிபலிக்கச் செய்கின்றனவாம்.

"இவ்வகண்ட, நிரந்தர, பரிபூரண நன்மை யென்பதோ கடவுள்? அக்கடவுளுக்கு உருவமுண்டா, அல்லவா? ஆன்மா என்பதென்னை? அதற்கு அழிவுண்டோ? அழிவில்லையாயின், மரணத்திற்குப் பின், அதின் நிலையென்னையோ? இவைகளைப்பற்றி இவருடைய சித்தாந்தங்கள் என்னை?" என வினவலாம்.



இவைகளைப்பற்றிய தன் கொள்கைகளைக் கட்டுக்கதைகளாலும் (Fables) உவமைக் கதைகளாலும் (Allegories and parables) ஒருவாறு இவர் குறிப்பிட்டிருக்கிறார். அவைகளின் சாரமாவது:—பரதத்வ வஸ்து (The absolute idea) ஏகம், (The One) சிவம் என்பதேயாம்; அது மனோவாக்குக் காயங்களுக்கு அதீதமானது; இயற்கை யுலகில், சூரியன் பிரகாசிப்பது போல், சிதாகாசத்தில் பாரமார்த்திக உலகில், அது ஜ்வலித்துக்கொண் டிருக்கின்றது; ஒளியின் பிறப்பிடமாய், ஞானத்தின் அதிகாரியாய், இனிமையின் ஊற்றுய்ச் சாகரமாய், சத்தியத்தின் பிறப்பிடமாய் உறைவிடமாய் புகலிடமாய், நன்மையின் ஆரம்பமாய் முடிவாய், விளங்குவது; கேவலப் பொறிகளால் ஸ்பரிசிக்கப்படாதது; சாமான்ய புத்தியால் கோசரிக்கக் கூடாதது. உருவமா, அருவமா, அல்லது அருவுருவா என்பதை நிர்ணயிக்க வல்லார் எவர்? அப் பரவஸ்துவின் அருள் பெற்றவரேயாம். புலனுணர்ச்சிகளின் இயக்கத்தால், உள்ளுணர்வு கிளர்ச்சியுறுகின்றது; இவ்வுள்ளுணர்வின் அகோசர இயக்கத்தால் சம்பூர்ணநிலையெய்தவே, அப் பரவஸ்து எத்தன்மையதென்பது புலனாகும்.

"முழுநன்மையினின்று இவ்வுலகம் உண்டாகி நிலைத்திருப்பதெனின், மேலும் அந்நன்மையே ஆதியாய் அந்தமாய் நித்தியமாய் விளங்குகின்றதெனின், குறைகள் தீமைகள் வலி வருத்தம் பாபம் என்பன யாவை? ஏன் எங்கிருந்து எவ்வாறு உற்பத்தியாகி, இப்புவியில் நிலவி வருகின்றன? காட்சியுலகம் மூலவஸ்துக்களின் மலினமாய்த் தாழ்ந்த பிம்பமெனின், தோற்றவுலகின் பயனென்னை?" பிரபஞ்ச சிருஷ்டியினின்று, அதாவது பரவஸ்துவின் எண்ணம், அல்லது விருப்பத்தின் உருவமான இப்பிரபஞ்சம் வெளித் தோன்றியவுடன் தான் தீமை என்பது வெளியாகி நிலவி நிற்கத் தலைப்பட்டதுபோலும். தீமை என்பது குறையை உணர்த்துவதாகும். இப்பொருள் கொண்டதே பாபம் என்றதும். இக்குறையின் வாயிலாக நிறைவை யறிந்து, பேதகங்கள் மூலமாக இணக்கத்தை உணர்ந்து, பன்மைகளின் வழியாக ஒற்றுமையை ஊகித்து அறிந்தவுடன், பாபம் தீமைஎன்பன அற்றுப்போம். அத்தீமை, அல்லது பாபம் என்பதை அகற்றிக் குறைத்தற்கான சக்தி மனிதனுள்ளிருக்கின்றது. இச்சக்தியே, விசுவாசம் நம்பிக்கை பக்தி எனப்படுவது. வியவகாரிக ஞானத்தால், தர்க்க முறையால், புத்தியின் உதவியால் பரவஸ்துவை அறிய முடியாது; நம்பிக்கை, அல்லது பக்தியினாற்றான் இயலும். பாரமார்த்திக வழியி லிருத்துவதும் தெய்விக வாழ்க்கையைப் பற்றியொழுகச் செய்வதும் ஜகத்காரணனைக் காணச் செய்வதும், விசுவாசம், அல்லது பக்தியேயாம். சுதந்தரம் கட்டுப்பாடு, தெய்விகவுணர்வு பிரகிருதிவிதி, நன்மை தீமை, என்பவற்றுள் நிகழும் பிணக்கத்தையும் போரையும் நிறுத்திச் சர்வ நன்மையைப் பிரஸ்தாபித்து உயரவேண்டும், உயரலாம்; இதற்கு அநுகூலிப்பது இயற்கையுலகாம்.

நீதியும் வாய்மையும் தைரியமும்—பொறுமையும் அன்பும் இனிமையும் கூடப்-பெற்றவர்களே சான்றோர். நற்சிந்தனை வீரியம் மிதம். அல்லது புலனடக்கம், ஆகியவைகளே உயரிய அறிவின் அறிகுறிகளாவன; மனவடக்கமே ஞானம்; இருதயத் தூய்மையே தைரியம்; பொறிகளின் ஒத்த நல்லுழைப்பே க்ஷமை என்பது.

மாந்தர் அறவுணர்ச்சி விருத்திக்கப்பெற்றுக் கடவுட்டன்மை யாதற்குக் கல்வி அதியாவசியமானது. இது தனியாய்ப் பெற்று அநுபவிக்க முடியாதது; சங்கங்களிற்றான் சாத்தியப்படும்.

ராஜாங்கத்தைச் சரிவர நடாத்திப் பிரஜைகளை நன்கு பரிபாலித்து எழுப்பி யுயர்த்துதற்கு, ஞானிகளும் சூரர்களும், வர்த்தகர்களும் தொழிலாளிகளும் விவசாயிகளும் பணிவிடைக்காரர்களும் அவசியம். ஆள்பவர்க்கு அணிகலம் ஞானம்; வீரர்களுக்கு அணிகலம் தைரியம்; கீழ்ப்படிதல் பொறுமை உழைப்புக்களே பின்னவர்களின் குணாதிசயங்கள்.

நீ நான், உன்னுடையது என்னுடையது, என்ற அகங்காரமும் மமகாரமும் அறவே ஒழிக்கப்படவேண்டும்.

அங்கம் குடும்பத்தின் பாகமாகவும், குடும்பம் சங்கத்தின் கிளையாகவும், சங்கம் ராஜாங்கத்தின் அம்சமாகவும் விளங்கவேண்டும்.

பிறக்கும் குழந்தைகளின் தகப்பன் ராஜாங்கமேயாகும்; ராஜாங்கமே அவர்களைக் கற்பிக்கவேண்டும்.

இழிய லாபம் கீர்த்தி முதலாயினவைகளை உத்தேசித்துக் கல்வி பயிலக் கூடாது. சிரத்தை பிரயத்தனம் விடாமுயற்சி, குறைவுறா ஊக்கம், தளரா வுழைப்பு, ஆழ்ந்த சுயவிசாரிப்பு, சலிக்காத பொறுமை, திடபக்தி, அயர்வுறா வீரியம், முதலானவைகளி னின்றே வாழ்க்கை சிறப்படைகின்றது. இவைகளுக்கெல்லாம் அடிகோலும் பக்கபலமும் உற்ற துணையுமாவது பரந்த கல்வியே.

(முற்றிற்று.) T. R. இராஜகோபால்.

## காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(675-வது பக்கத் தொடர்ச்சி)

### 31. தூங்கக் கண் இல்லையே!

இன்னவிதம் காந்திமதி பெருங்குன்றம் புக்கிருந்தானென்றெண்ணிக் கலாநாதன் உளங்கரைந் துருகும் வேளையில், சித்ரமோகன மாளிகையின்கண் ஆவியும் உடலுந் தளர்ந்திருந்த கட்டழகி, மன்னர் யாவரும் தம் பரிவாரங்களுடன் அகன்றபின், ஆளரவ மற்றது தெளிந்து, பாண்மகள்பால் பரிவினால் அவளுற்றவிடம் தேடுதற்கு வெளிவந்தாள். சோலைக்குளெங்கு மவளைக் காண்கிலள். மதிலிற்கு வெளியே சென்று தேட நினைத்த காந்திமதியின் கண்களில் சந்திரனொளியூடே தூக்கினில் தொங்குமந்தப் படுகொலையாளர்களின் உடலமிரண்டும் தென்பட்டன. கூகையுங் குராலுங் குழுமியப் பாதகர் தம் கண்குடைந் துண்டும், செவி அகழ்ந் தருந்தியும் இடை இடையே கிழிக்கலாற்றாக் கன்னெஞ்சை வியப்பனபோல் கூவுங் குரலிற்கேற்க, அச்சவங்களசைகின்ற தோற்றங் காணப் பெரிதும் அஞ்சினளாகி முகத்திற் பொத்தியகரங்களோடும் தன்னறை விரைந்துமீண்டாள். மீண்டவளின் உடலம் கட்டிலிலயர்ந்து கிடந்ததேனும் அவள் மனம், சிதைவுண்டு துஞ்சினனென்றெண்ணிய பொதியறையில் சித்ராங்க னருகுபுக் கழுவதும், தன்பிரிவிற்காற்றா தழுங்குவானென் றுன்னிய கலாநாதனருகு சேர்ந்து பரிவதும், நாளைப்போரில் மீள்வனோவெனக் கந்தன்பாலணுகிக் கவலையுறுவதுமாகிச் சுழன்றிருக்கக் கண்ணிமையும் தூக்கத்தின் பாரத்தால் தளர்ந்து மூடின.

மணிவாளனை மற்றிரு வாசரோடு கோமற்குத் துணைகூவி வந்தவப் பாண்மகளின் உள்வரிக் கோலங்கொண்ட மாலினி, மாளிகையின் வாயிலை அணுகியதும் நெஞ்சு

நடுக்குறும் சங்கை யொன்றுற்றுச் சேனையோ டேகாமல் புறமே தங்கிவிட்டதாற்றான் அவள் விசாரணை காலத்திலேனும் அதற்குப் பிறகேனும் அவ்வயினெங்கும் காணப்பட்டிலள். நிலவறையில் சித்ராங்கன் அடைபட்டுக்கிடப்பதைக் காந்திமதிக்கு இவள் சொல்லிக் 'கொலையோ கொலையென்று கூக்குரலிடலாமோ' வென முதலில் கேட்டபோது, உதவி தேடுவாரானுல் அவ்வன்மனத் தீமையோர் இளவரசனின் குறையுயிரையும் ஒல்லை குலைத்து விடுவாரென்று காந்திமதி பயங்கொண்டியம்பியது மாலினியின் நினைவிற்கு அத்தருணம் வந்ததாலே, "நமனை நானே வருந்தியழைத்துக் கொணர்ந்தேனே" வெனத் தடுமாற்ற மெய்தினுள். எனவே, சித்ராங்கனின் கதி இன்னதாயிற்றென்று அறிகின்றவரையில் தன்னைத் தெரிவித்துக் கொள்ளப்படாதென்ற தகுதி நோக்கிப் பின்னின்ற இவள் காதில் 'இளவரசன் வதையுண்டான்'என்னுஞ் சொற்கள் உருவித் தைத்தன. "நன்றுநன்றென்றவள் நகையரும்பினுள். இன்று இன்றுன்னையா னெய்தி விண்ணிலே சென்று சென்றுன்வயின் நாளும் வைகுவன் என்று என்றின்னவா றழுது புலம்பினுள். "குண்டிலினி நதிதானும் வற்றவில்லையே" எனத் தன் மனத்துளே தேர்ந்ததெதுபற்றி! நதியன்றிக் கடலே வறண்டுலர்ந்தாலும் அவள் கண்ணின்று புரண்டுபாயும் வெள்ளமே மூழ்குதற்குப் போதாதோ!

இன்ன தன்மையளாய மாலினி உடைந்த மனத்தாலே தன்னுயிரை உகுத்துவிடத் துணிந்து வேலைக் கரையுற்று நதியுங்கடலும் கூடுமிடத்திலோர் புளினத்தமர்ந்து,தன் காலை நதியின் நீரினுள் நாலவிட்டு உட்கார்ந்தாள். குடபால் சாயுங் கதிரவனுெளிபட அந்த ஆறு செம்பொன் ஆடைசார்த்திப் பள்ளியறைமேவும் நங்கையைப்போலவும், வருமவளைக் கடலரையன் அலைக்கையால் வாரி யாதாரத்துடன் அணைப்பதுபோலவும் நம் பேதை மாலினிக்குத் தோன்ற " அமங்கலியேன் மணக்கோலத்திற்கு எதிர்ப்பட்டேனே" என்றுளங் கசிந்தாள். காலைச் சிலமீன்கள் வந்துகடிக்க, "மச்சங்காள், நும்முணவிற்கு முன்சுவை காண்கின்றீரோ?......நொய்தின் வளர்ந்த இவ்வுடல் நும்வாயுள் கரைந்தினிக்கும், கவலை வேண்டா" எனச் செப்பினுள். உருமீன்வரவை உற்று நோக்கிய கொக்கொன்று மாலினிக்கயலில் வாடியிருந்தது. அதனைப்பார்த்துக், "குருகே, நீயுந் துணையிழந்தென்போல் உயிர்மாய்க்க வந்துளாயோ! ஆயின் தாமதம் ஏன்! நீர் குளிர்கின்றதென்று குளிக்கக் கூசுகின்றனையோ, பேதாய்!" எனப் பரிகசித்தாள்.

இவ்வண்ணம் இவள் தனதகத்துள் உழக்கும் நினைவுகளைப் புறப்படித்திப் புலம்பப் பகலவனும் மறைந்து மாலைப்படலம் சூழ்வதாயிற்று? தினகரன் சாய்ந்தானென்றுல் திங்களோ தோன்றி நின்றுன். தற்கொலைக்கு விண்சுடரொன்றும் கரிகாண ஆற்றுதாள்போல் பின்னுந் தாழ்ந்தாள். இப்படி இவள் கொண்டகருத்தும் மாலைக் காலமும் தேயத்தேய இருளும் வளர்ந்தது. "இனி என்னருந் துணைவனைக் காக்கவைத்தல் தக்கதன்று" என்று துணிந்து ஆற்றினுட்குதிக்க எழுந்தனள். அந்தச் சமயத்தில் மாளிகையினின்று மன்னவர் தம் படைகளுடன் புடைபெயரும் பெருந்தமரம் மாலினியின் செவிக்கெட்ட, " ஆம், ஆம், என் அன்பனின் திருவுடலைச் சுமந்து செல்வாரவர். அம்முகத்தைக் கடைமுறையாய்க் காணுது யான் மாண்டால் முத்தி பெறுவதெங்ஙனம்," என்று நொந்துள தன் மனத்துள் நினைத்து மாளிகைப்புறம் கடிதின் ஏகி,அகல்வோரைக்கருதி நோக்கினுள். அனைவரும் வரும் வருத்தத்தைத் தாங்கிச் சென்றுர்களே யன்றிச் சித்ராங்கனைச் சுமந்து சென்றுரில்லை. ஆகையால் இளவரசனை மாளிகையின்கண்ணே வளர்த்தியிருத்தல் வேண்டுமென உன்னிய மாலினி, வசனியம் கண்மறைந்தபின் கோட்டைக்குள் ஏகினுள். ஏகியவுடன் அவள் மாளிகையினுள் புகவில்லை. பாலுஞ் சோறும் புழையூடளித்துச் சித்ராங்கனைச் சிறிதுநாள் வளர்த்த வழியே அவளது கால்கள் நாடின. அவ்வயின் நணுகலும் அங்குக் கீழ்க்கிடந்த நாணற் குழலைக்கண்டு மாழ்கி மகவிற்கழும் தாயெனப் புலம்பினுள்.

இவள் நிலை இவ்வாருக, முன் மந்தாகினியை அறையகத்தேவிட்டுப் புறம்போந்த இளவரசன்,மன்னரெலாம் அகன்றனரென்பதறிந்து மாலினியை எங்குத் தேடியும் எய்தாமல், மீண்டும் மந்தாகினி மனைவந்து அவள்பால், மாளிகை ஆளற்றிருப்பதையும் மாலினி கிடைக்கப் பெருமையையும் கூறி இரங்கினுன். அம்மாதரசி, "நாமிருவரும் கூடி அவளை அயலெங்கும் நேடிவருவோம், நாயக, திருவ." என்று சித்ராங்கனையுந் தன்னேடழைத்துக்கொண்டு ஒவ்வோரறையாய்த் திறந்து சோதித்தனள். இவ்வாறே, காந்திமதி துயின்றிருந்த அறைக்குள்ளும் அவர்கள் வரவே, மாலினியென்று சித்ராங்கன் அவளை எண்ணி அருகுசார, படுத்திருந்தவள் காந்திமதி என்பதுணர்ந்த மந்தாகினி அவன் கரங்களைப் பிடித்து நிறுத்தினுள். காந்திமதிக்கும் நித்திரை தெளிந்தது. உயிர்விண்டு வானுடு புகுந்துவிட்டான் எண்றெண்ணியிருந்த தன் அரசனை கண்முன் நிற்கக்கண்ட கட்டழகி காண்பது கனவோ நினைவோ வென்று அயிர்த்திருப்பாளல்லள்; தானே தனுவொடு துறக்க மெய்தினுளென்ன மதித்து மகிழ்ந்தாள். செம்மலின் கரங்களைப்பற்றி நிற்கும் செவ்வியள் பாண்மகளல்லளாகையால் மந்தாகினியாய்த்தான் இருத்தல்வேண்டு மென ஊகித்துப் பெரியதோர் உவகைபொங்க, " மன்னவா, நீ மறலியைப் புறங்காணச் செய்தவகை ஏதென்று கேட்டுக் காலத்தைக் கழிக்கமாட்டேன். நின் தேவியுடன் எதிர்வந்து எனக்கு நீ காட்சிகொடுக்க இசைந்தனையே! உன் பெருந்தன்மையைப் பாராட்டும் பரிசு தெரியாமல் திகைக்கின்றேன்.........இறைவா.........நின்குடிகள் கண்களிக்க நெடியதோரூழி நீ இவ்வாறே வாழ்க" என்றனள். "காந்திமதி, நின்னனைய நல்லாளெனக்கு ஆசிகூற என் முன்னேர் என்னதவம் முயன்றுளாரோ!"என்று எதிர் வினயங்கூறிச் சித்ராங்கன், "இம்மாளிகையின்கண் பாண்மகளொன்றொருத்தி இருந்துளாளே, அவளை நீ இந்நாள் கண்டதுண்டோ?" என வினவினன்.

" அன்னுளைத் தேடிய கால் அயர்ந்தபின்னே இவ்வறைவந்து பள்ளிகொண்டேன். பாவமப் பேதைமகள் எங்குற்றனளோ......வேந்தே, இக்காலம் நீ என்முன் நிற்பது உன் பத்தினி செய்த பாக்கியமேயன்றி அப்பெண்ணின் முயற்சியாலும் என்பது அறிவாயோ?"

"எம்மிறை அறிவார். மற்று, அம்மாதினைத் தேடுதல் பொருட்டே இவணுற்றேம். நங்காய், நீயும் நம்முடன் வருவாயோ?" என்றனள் மந்தாகினி.

இனி, இம்மூவருமாக மாலினியைத் தேடிக்கொண்டு தோட்டத்திற்குள் சென்றனர். சென்றிவர் மாலினியைத் தேடிவருகையில் சித்ராங்கன் தான் உயிர்தப்பிய விதத்தைக் காந்திமதிக்குச் சொல்லினுன். அது கேட்ட அவள், "அரசே, நினக்கு உணவூற்றிய புழை இருக்குமிடம் காட்டுகின்றேன், வா," என அழைத்தேகினள். இம்மூவரும் அவ்விடம் அடையும்போது அங்கு, நிலவொளி திரண்டு ஒலியாய் மாறி மண்ணிலிருந்து எழுமாயின், அச்சம்பவம் காண்போர் கேட்போர் மனதினுள் எப்பான்மையதான உணர்ச்சி பிறப்பிக்குமென



ஊகித்துரைக்க இயலுமாயின்,அந்நிலையில் மாலினி தரைகிடந் தழுதிருந்தனளென்னச் சாற்றலாம். அன்னுள், "செல்வாவோ சீமானே சித்ராங்கா, உயிருகுத்தே சிறிதுமிங்கு நில்லாமல் நீயிருக்குமிடம் நாடி வருகின்றேன். முன்றிலிலன்று வல்வினையேன் மதிதனக்கு மறுதுடைத்த காமிருந்தும் வஞ்சருன்னைக் கொல்லாமற் காக்கத்தான் கூடாது போயிற்றே, சொல்லாய் ஐயா! பாவியேன் நான் முற்படவே மாண்டனையோ! பத்தினி யான்தாலிநின்றுன் ஆவியினை அளித்திருந்தால்ஆகாதோ! பொல்லாத விதியே தூண்டக் கூவியிங்கே கூற்றுவனைக் கொணர்ந்தேனே. என்செய்கேன். விண்ணில் நின்பால் மேவிவருந் தமியேனை இழுதையென்று கைவிதிர்த்து விலக்காய், ஐயோ!" எனப்புழையருகே வாய்வைத்தாற்றினுள். பிலவறையில் பட்டுள்ள அவன் நாய் பைரவன் இக்குரல் கேட்டுக் குலைக்கலாயிற்று. "விந்தையினும் விந்தையிது! ஈசாவோ என்தன்னை இந்தவிதஞ் சோதித்தால் நேராமோ! என் என்! நாய் புகுந்த அவ்வழியே நாயகனும் தப்பித்தான் போயிருந்தா லாகாதோ மற்று" என்று புதியதோர் ஊக்கம் மேலிடப், "பைரவா, பேசடா, சொல்லடா! ஐயோ நாய்க்கொன்று நாருக் கொன்று வேறுவேறு மொழிவிதித்த கடவுளையும் நடுநிலை நீதியுடையவனென மதிக்கின்றனரே இப்பூதலத்தோர்" என அத்துவாரத்தினருகே தன் செவியைச் சார்த்தி நிலத்திற் படுத்தாள் மாலினி. படுத்ததும் மூர்ச்சனை யுற்றனள்.

T. N. சேஷாசலம்.

# தேவாரமும் ஐந்திணையும்.

(671-வது பக்கத் தொடர்ச்சி)

189018

## 2. திணைகளின் மூவகைப் பொருள்.

iii. தாழ்ந்தோர் : — மருதம், முல்லை, நெய்தல், பாலை, குறிஞ்சி நிலங்களில் உள்ள திருக்கோயில்களுக்கு மூவரும் எழுந்தருளியபோது அவ்வக் கோயில்களுக்குச் சுற்றிலுமுள்ள எல்லா ஸ்தாவர ஜங்கமப்பொருள்களையும் கோயில் வர்ணனையாகப் பாசுரங்களில் அமைத்துப் பாடினர், என்பதை முன்னமே குறித்துள்ளோம். மூவரும் அரசரெனத்தக்க அந்தஸ்துடையவர்களாய் லௌகீகத்தில் கூறலாமாகையால், இவர்களுக்கு எந்நிலமாந்தரும் உயர்வு தாழ்வின்றி ஒரேவிதமாய்க் காணப்பட்டனர். அவ்வவ்விடத்திலும் கடவுளையே உயர்ந்தோர் நாமங்கொடுத்து முன்னிலைப் படுத்துவதால், ஐந்திணையின் குடிகளும் கருப்பொருளில் பெரும்பாலும் தாழ்ந்தோராய்க் காட்டப்பட்ட நாமங்களாலேயே தேவாரத்தில் மொழியப்பட்டனர்.இவர்கள் பகர்ந்த குடிகள் சிவநேசத் தொண்டர்களாய்ப் பெரும்பாலும் விளங்கியதால், அன்னேரும் இப்பகுதியிற் சார, யாதொரு குறையுங்கூறுர் என நாம் அநுமானிக்கலாம்.

முல்லைக்கருகிலுள்ள குறிஞ்சி வாசிகளிலும் சிவனடியார்கள் மூவர்காலத்தில் திகழ்வர் :—

" கொல்லை வேடர் கூடிநின்று கும்பிட
முல்லை யயலே முறுவல் செய்யு முதுகுன்றே "

என்றுர் சம்பந்தர். கொல்லையில் வேடர் பக்தர்களாயிருப்பதுபோல் காலையில் ஆற்றில் ஸ்நானம்செய்த அடியார்களைப் புகழ்ந்து பாடியதைக் காண்க :—

முத்திசையும் புனற்பொன்னி
மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப்
பலகாலும் பணிந்தேத்த
வெத்திசையும் வானவர்க
ளெம்பெருமா னெனவிறைஞ்சு
மத்திசையா மையாறற்
கானாய்நா னுய்ந்தேனே.
—திருவையாறு-பண்-பழந்தக்கராகம் 9.

கடவுன் வழிபடும் நிலம் ஒன்றன்று, எத்திணையிலும் எவ்வவர் மருங்கும் எத்திக்கிலும் காணலாமென்பதுபோல் சுந்தரரும் ஸ்ரீமத் தட்சணமூர்த்தியின் கோலம் வர்ணிப்பதையும் காண்க :—

காது பொத்தரைக் கின்னர ருழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயங்
கோதின் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல வானிழற் கீழறம் பகர
வேதஞ் செய்தவ ரெய்திய வின்ப
மியானுங் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுக ழுலகி
னிலவு தென்றிரு நின்றியூ ரானே!
—திருநின்றியூர்-பண், தக்கேசி.6.

இவ்வாறு பக்தி சிரத்தையில் ஜீவர்களுக்கு பேதமின்மையால், கருப்பொருள்களில் "தாழ்ந்தோர்" என்று இங்குக் காட்டப்படும் மனிதர் எந்நிலத்திலும் ஈனர்என்று எண்ணலாகாது. எயினர் மறவரைக் குறிக்குமிடத்தும் தேவாரப் பாசுரங்களில் இகழ்ச்சி பெரும்பாலும் காணப்படவில்லை. இனி ஒவ்வொரு திணையின் குடிகளைத் தேவார வாயிலாய்க் காண்போம்:—

(i) குறிஞ்சி:—இந்நிலத்தில் சாதாரணமாய் வசிக்கும் மனிதர்கள் குறவர், கானவர் என்னும் ஜாதியர்:—

ஆனைக்குல மிரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரிய
தானப்பிடி செவிதாழ்த்திட வதற்குமிக விரங்கி
மானக்குற வடல் வேடர்க ளிலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே
—சுந்தரர்.

கானவன்காண் கானவனுய்ப் பொருதான் றுன்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்குமாயி னுன்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றுன்காண்
ஊனவன்காண் உலகத்துக் குயிரா னுன்காண்
உரையவன்கா னுணர்வவன்கா னுணர்ந்தார்க்
தேனவன்காண் டிருமுண்டீச் சாத்து மேய [கென்றும்
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.
—அப்பர்.

(ii) முல்லை:—இத்திணையில் தாழ்ந்தோர் இடையர், ஆயர் என்னும் நாமம் பெற்றவர். † இவர் தேவாரத்தில் யாதொரு சந்தர்ப்பத்திலும் காட்டப்படவில்லை. ஆயினும் ஒருவாறு குறிப்பாலுணரலாகும்:—

† ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய
ராவயின் வரூஉங் கிழவரு முளரே.
—தொல்காப்பியம். பொருள், 21.

இடையறியேன் றலையறியே
    னெம்பெருமான் சரணமென்பேன்
அடையுடைய னம்மடியா
    னென்றவற்றைப் பாராதே
விடையுடையான் விடநாதன்
    வெண்ணீற்றன் புலியின்றோல்
உடையுடையா னெனையுடையா
    னுனோம் போகீரென்றானே.

—சுந்தரர்-(திருவெண்பாக்கம் - பண்-சீயமரம்)

ஆய முடையது நாமறியோ மரணத்தவரைக்
காயக் கணைசிலை வாங்கியு மெய்தும் துயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத் துறையுறைவார் [சடைமேல்
பாயும்வெண்ணீர்த் திரைக்கங்கையெம்மானுக்கழகியதே.

—அப்பர்-திருச்சோற்றுத்துறை-திருவிருத்தம். 7.

(iii) பாலை:—இத்திணையில் தாழ்ந்தோரை எயினர், என்றும் மறவரென்றும் தொல்காப்பியம் கூறும்.

குறவனார்தம்மக டம்மகனார் மணவாட்டி கொல்லை
மறவனாராயங் கோர்பன்றிபின் போவது மாயங்கண்டீர்
இறைவனா ராதியார் சோதியா ராயங்கோர் சோர்வுபடா*
அறவனாராவ தறிந்தோமேல் நாமிவர்க் காட்படோமே.

—சுந்தரர்.

(vi) மருதம்:—இதில் தாழ்ந்தோராவர் உழவர், கடையர் என்பவர்:—

மாறெதிர் வருதிரி புரமெரித்து
நீறது வாக்கிய நிமலனகர்
நாறுடை நடுபவ நுழவரோடும்
சேறுடை வயலணி சிவபுரமே.

—சம்பந்தர்.

"அடைவாகிய வடியார்தொழ வலரோன்றலை யதனில்
மடவாரிடு பலிவந்துண லுடையானவ னிடமாம்
கடையார்தர வகிலார்கழை முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர்விய லூரே"

—சம்பந்தர்.

வீங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
    பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
    நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
    திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்க
    ளுவினைக ளுருமுடனே.

—சம்பந்தர்.

(v) நெய்தல்:—இத்திணையில் தாழ்ந்தோரை நுளையர், திமிலர் என்பார்:—

"பாய்திமலர் கரையேறி மீன்வாரி..." என்னும் பாசுரம் பின்வருவதை நோக்குக.

ஏழைமாதர் கடைதோறு மிடுபலிக் கென்று
கூழை வாளரவாட்டும் பிரானுறை கோயின்
மாழை யொண்கண் வளைக்கை நுளைச்சியர் வண்பூந்
தாழை வெண்மடற் கொய்து கொண்டாடு சாய்க்

—சம்பந்தர். [காடே

*"சோர்வுபடா" என்றது திணை யிலக்கணத்தையும் காலத்தையுங் கருதியே.

நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

—தொல்காப்பியம்.

(IV) உணவு—திணைக்குத் தக்கவாறு உணவும் மாறுதல் சகஜமே. மலைநாட்டி லிருப்போருக்குத் தக்கவுணவு குளிரைப்போக்கி உஷ்ணம் விளைக்கத்தக்கனவும் பயிர்த்தொழிலின்றிக் கிடைக்கத் தக்கனவுமாம். மலையில் விளையக்கூடிய பயிர் திணைபோன்றன. அவ்வாறே முல்லைநிலத்தில் கொல்லைப் பயிரான வரகு, சாமை, முதிரை முதலியனவாதலால் "கொல்லை வேடுவர்" என்னும் ஆயர் முதலானோர் கஞ்சி குடிப்பார். பாலை நிலத்தோருக்கு யாதொரு பயிருமில்லாததால், வழிபறி கொள்ளையால் ஜீவிப்பர். நெய்தல் நிலமக்கள் மீன்விற்றும் உப்புவிற்றும் அவற்றால் பண்டமாற்றுதல் செய்து உயிர் வாழ்வார். "உழுதுண்டு வாழ்வோரே வாழ்வோர்" என்ற திருக்குறள்வாக்கியத்தின்படி மருதநிலமக்கள் நஞ்செய்ப் பயிர் செய்வதாலும், சோலைகள், தோட்டங்கள் வைத்திருப்பதாலும், எல்லாவிளைவுகளுக்கும் அதிகாரிகளாய் மற்ற நிலத்தோருக்குப் பண்டமாற்றல் செய்வார். இந்நிலத்தாருக்கு முக்கிய உணவுப்பொருள் நெல்லாகும். மருதநிலவாசிகள் முக்கியமாய் அக்காலத்தில் உண்டது செந்நெல். இச் செந்நெல்லையே தேவாரம் புகழும். வெண்ணெல்லும் அக்காலத்தில் உளதாயினும், நமது நூதன நாகரிகத்தில் உபயோகப் படுத்துவதுபோல், அக்காலத்தில் அது சிறப்படைந்த தன்று. ஏனெனில் செந்நெல்லைப்போல், வெண்ணெல் தேகத்திற்கு இத்துணை ஆரோக்கியமும், திடமும் கொடாதென்பது எக்காலத்திலும் வைத்தியர் துணிவாம். இனித் தேவாரத்தில் இவ்வுணவுப் பொருள்களைக் குறித்திருக்கும் பாசுரங்களைக் காண்போம்:—

(i) குறிஞ்சி இதில் திணையும் மூங்கிலரிசியும் உணவுப் பொருள்களாம்; திணைப்புலமே குறிஞ்சிக்குப் பழனமாகும்:—

மானிடமார் தருகையர்
    மாமழுவாரும் வலத்தார்
ஊனிடையார் தலையோட்டி
    லுண்கலனாக வுகந்தார்
தேனிடையார் தருசந்தின்
    றிண்சிறையாற் றிணைவித்தி
கானிடை வேடர் விளைக்கும்
    கற்குடி மாமலை யாரே

சம்பந்தர்.

ஒருங்களி நீயிறை வாவென்
    றும்பர்க ளோல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை
    யின்னமு துண்ணிய வீசர்
மருங்களியார் பிடிவாயில்
    வாழ்வெதிரின் முளைவாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
    கற்குடி மாமலை யாரே.

[வெதிர் என்பது மூங்கில். தெலுங்கில் இப்பதம் நன்கு வழங்கும் சொல்லாம்.]

(ii) முல்லை:—இதில் உணவுப்பொருள்கள் வரகு, சாமை, முதிரை முதலியன. இவை தனித்தனி விவரமாய்த் தேவாரத்தில் கூறப்படவில்லை. இவை விளையும் புலங்கள் ஆற்றோரமானவையாய்ப் பெரும்பாலும் மழையை நம்பியுய்வன. மழையின்றேல், காய்ந்துபோம். வெள்ளம் வரின், பாழாம்.

மருவிப் பிரிய மாட்டேனுன்
    வழிநின் றொழிந்தே னொழுகிலேன்
பருவி விச்சி மலைச்சாரற்
    பட்டை கொண்டு பகடாடிக்



குருவி யோப்பிக் கிளிகடிவார்
    குழன்மேல் மாலை கொண்டோட்டம்
தரவந் திரைகா விரிக்கோட்டத்
    தையா றுடைய வடிகளோ! —சுந்தரர்.

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
    பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணி யிடறி
    யிருகரைப் பெருமரம் பீழ்ந்துகொண் டெற்றிக்
கலங்குமா காவிரித் திருத்தியார் வேள்விக்
    குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
விலங்குமா றறிகிலே னென்பெரு மானை
    மேலைநோ யிம்மையே வீடுவித் தானை—சுந்தரர்.

அல்லி மலர் மேலயனு மரவினணை யானும்
சொல்லிப் பரவித் தொடரவொண்ணாச் சோதியூர்
கொல்லை வேடர் கூடிநின்று கும்பிட
முல்லை யயலே முறுவல்செய்யு முதுகுன்றே

—சம்பந்தர்.

(iii) பாலை:—இந்நிலமாந்தர் உணவு மிகவும் பாவத்துடன் கொள்ளும் உணவாம். வழியில் வரும் மனிதர்களையும் பசுக்களையும் கொன்று உயிர்வாழ்தல் இவர் செய்கை:—

பசுக்களே கொன்று தின்று
    பாவிகள் பாவ மொன்றறியார்
உயிர்க்கொலை பல நேர்ந்து
    நாடொறுங் கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர்வாழ்
    முருகன் பூண்டிமா நகர்வாய்
இசுக்கழியப் பயிக்கம் கொண்டு
    நீரெத்துக் கிங்கிருந்தீ ரெம்பிரானீரே?

—சுந்தரர்.

(iv) மருதம்:—இந்நில உணவு, செந்நெல், வெண்ணெல்:—

தேனமர் பொழில்கொ ளாலை விளை செந்நெறுன்னி
    வளர் செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
    மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளு மடியாரை வந்து
    நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலை யோது மடியார்கள் வானி
    லரசாள்வ ராணை நமதே.

—சம்பந்தர்.

வெண்செந்நெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட லிசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு ஞானசம் பந்த னல்ல
ஒண்சொலி னிவைமாலை யுருவெணத் தவமாமே.

—சம்பந்தர்.

(v) நெய்தல்:—உப்புவிலை யாலும், மீன் விலையாலும் இந்நில மாந்தருக்கு உணவு ஏற்படும்:—

வாசமலர் மேவியுறை வானுநெடு
    மாலுமறி யாத நெறியைக்
கூசுதல் செயாதவம ணாதரொடு
    தேரர்குறு காத வானூர்
காசுமணி வார்கனக நீடுகட
    லோடுதிரை வார்துவலை மேல்
வீசுவலை வாணரவை வாரிவிலை
    பேசுமெழில் வேதவனமே.

—சம்பந்தர்.

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டுங் கைதல்சூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகர்
தீயெரிகை மகிழ்ந்தாடும் திருவேட்டக் குடியாரே.

—சம்பந்தர்.

E. N. தணிகாசல முதலியார்.

# அகப்பொருள் வரலாறு

(677-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஒருவழித் தணத்தல்.

தனது களவொழுக்கம் இவ்வாறு நீடலால் அம்பலும் அலருமெழுந்து தலைமகளின் கற்புக்கும் பொற்புக்கும் இழுக்குரை ஏற்பட்டதையும், அதனாலவள் மனநொந்து மாழ்குவதையும் பாங்கி எடுத்திசைக்கக் கேட்ட தலைமகன், முன்போல் அடிக்கடி தலைவியைச் சந்திக்காது சில நாள் அவளைத் தணந்து அவளூரில் கால்வைக்காமல் ஒதுங்கியிருந்தால், பிறரைப் பழிதூற்றி இழித்துரைத் தலையே தந்தொழிலாக் கொண்ட துர்க்குணர்களின் வாயடங்கிவிடும், அதன்பின்னர் வந்து அவளைத் தான் வரைந்துகொள்ளுதல் எளிதாகுமென்று கருதி, அக்கருத்தைப் பாங்கிக் குரைப்பான், "நைவளம் பழுத்த நயமொழி நங்காய், நான் என்னூரிலே செய்துமுடிக்க வேண்டிய முக்கியமான காரியமொன்றுளது; அதை முடித்துக்கொண்டு இரண்டுமூன்று நாளில் இங்கே வந்து நீ குறித்தவாறே செய்கின்றேன். மேலும்,

புகழும் பழியும் பெருக்கிற்
    பெருகும்; பெருகின்று
நிகழும் நிகழா நிகழ்த்தின்
    அல்லால்; இதுநீ நினைப்பின்
அகழும் மதிலும் அணிதில்லையோன்
    அடிப்போது சென்னித்
திகழுமவர் செல்லல்போ லில்லையாம்
    பழிசின் மொழிக்கே.

ஆதலாற் சிறிதுகாலம் நானிங்கு வாராமலிருப்பதே நலம். என் பிரிவை அவளுக்கு மெல்ல வுணர்த்தி நான் வருந்துணையும் அவளை ஆற்றுவித்திரு" என்று கூறி அகன்றான்.

அதைப் பாங்கி செவ்விபார்த்து,

கருநாண் மலர்க்குழற் காரிகை யாயொரு காரணத்தால்
ஒருநா ளுனைவிட் டுறையவும் வேண்டினர், ஒன்றியநின்
பெருநாண் மடமை பிணிக்கப் பிணிப்புண்ட பேரறிவின்
வருநாண் மலர்த்தொங்கல் மன்னரென் றோதும்
    வயமொழித்தே.

என்று தலைவிக்குணர்த்த, அவளும் ஒன்றிரண்டு நாள் ஒருவாறு ஆற்றியிருந்தாள். அவன் வாராமல் நாளின்பின் நாளாகப் பலநாள்கழிய அவளுக்கு வேட்கை மேன்மேலும் வளர்ந்து துயரந்தாங்கமுடியாமல் அதிகரித்தது. எவ்வளவு முயன்றும் வெளிப்படாமல் அதையடக்க மாட்டாத தலைவி காலையிலும் மாலையிலும் தோழியுடன் தன்வீட்டைவிட்டு வெளிப்போந்து தமது குறிஞ்சிநில வெல்லையை இகந்துசென்று நெய்தற் கானலையுற்று, அன்பரிழைத்த கொடுமையை வாய்விட்டரற்றித் தன் மனத்தாபத்தைச் சற்றுத் தணித்துக்கொண்டு, பிறகு தன் வீட்டுக்குத் திரும்புவாள்.

ஒரு சமயம் ஞாழலினீழிலிலிருந்து, ஓயாமற் கதறிக் கொண்டு மடிந்துமடிந்து கரையில் விழுங் கல்லோலக் கடலை கண்ணுற்று,

* வாயி னிரங்கினை ஆர மெறிந்தனை
வால்வளை சிந்தினை தண்
பாயலை யுந்தினை மாலை யடைந்தனை
பாரி லுறங்கிலையால்
மாயம் புரிந்தனை நாளு மணர்தவர்
மாலை விளைத்திடவே
நேய மொழிந்து பின்னீங்கி யகன்றன
ராகும் நெடுங்கடலே.

என்று விம்மித் தேம்புவாள். ஒருநாள் தாமரை மலர் மீது தன் காதற் பெடையை மென்சிறகா லணைத்துத் துயிலும் அன்னச் சேவலைப் பார்த்து,

† நன்றோகை நல்குங் குளிர்முத்த
மீனும் நளிர்கடல்வாய்
இன்றோ கைவேலவர் போல
உனக்கு மிரக்கம், மிளிர்
கன்றோ கையோவக் கலுழ்வேனைக்
கண்டுங் கமலவணைத்
துன்றோ கையோடு துயில்கைநன்
றோசெம்பொற் சூட்டனமே.

என்று அழுங்கிச் சாம்புவாள். மற்றோர்காலை வயிரா மீனையுண்டு மகிழ்ந்துறையும் வண்டானப் பறவையை நோக்கி,

பொன்னு மணியும் பவளமும்
போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர்
விரவா தவரின்உண்ணோய்
இன்னு மறிகில வால், என்னை
பாவம்! இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை
தேரும்வண் டானங்களே.

என்று வருந்தி ஏங்குவாள். பின்னொரு பொழுது உறு மீன் வரப் பார்த்து ஒரு காலினின் றுறங்கு நாரையைக் கண்டு,

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து
கயல்வர உறங்கு புள்ளீரே
நிரைவளை கழன்று கவினல னழிந்து
துயிலறு நிலையை உள்ளீரே

அருமையுட னெங்கள் பெருமையை யறிந்தே
அருள்செய நீங்கள் வல்லீரே
மருவிய தலைவர் வளம்பதி புகுந்தென்
மனத்துய ரதனைச் சொல்லீரே.

என்று நைந்து மாழ்குவாள். இவ்வாறன்றிச் சில வேளை அவள், புரண்டலை வந்து புதுமணல் பரப்பிய புன்னையம் பொதும்பருட் புக்கிருந்து, கடற்றெய்வத்தைக் கும்பிட்டு வணங்கி 'இப்புளினத்தின்கண் கண்ணோட்டஞ் சிறிதுமின்றி என்னைக் கைவிட்டகன்ற நெடுந்தகையின் நெஞ்சை நெகிழ்வித்து அவரைஇன்னே யிங்குத் தரவல்லையோ வென்று,

ஆழி திருத்தும் புலியூ ருடையான் அருளினளித்
தாழி திருத்து மணற்குன்றில் நீத்தகன் றூர்வருகென்
றூழி திருத்திச் சுழிக்கணக் கோதி நையாமல், ஐய
வாழி, திருத்தித் தாக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே.'

என்றிவ்வாறு கூறித் தன்மணிவிரல் தேயச் ‡சுழிகளிழைக்குந்தோறுங் கண்ணீர் விழுந்து அவற்றை யழிப்பத் தளர்ந்து துயரின் மூழ்குவாள்; அல்லது,

முளைக்கும் பிறையை முனியும்
பிறைநுதல் முத்தரும்ப,
விளைக்கும் பசலை விழியிணை
காட்ட, விடாதவண்டர்
கிளைக்குந் தெரிவருங் கேதகை
நீழலின் கீழிருந்து
வளைக்குஞ் சுழிக்கும் அழிக்குமொண்
*கூடல் வளைக்கைகொண்டே.

இவ்வாறு, பிரிந்தவர் வந்து கூடுதலைக் குறிக்குந் தலைகூடிய நற்சுழி படுங்காறும் பொருந்தாச் சுழிகள்பல இழைத்திழைத்து அழித்தழித்து நற்குறி வாய்க்கப் பெறாது வருந்தி வாடுவாள்.

இவ்வாறவள் பலபடப்பன்னி ஈடழிந்து வீட்டுக்குத் திரும்பும்போது வழியில் நன்றாகத் தழைத்தலர்ந்து காற்றால் தலையசைந்தாடும் புன்னாக மரமொன்றைக் கண்டு,

கூத்தாடி மயிலாலும் வரையன்பர்
அருளன்பு குறைந்தன்னையும்
நீத்தார்கொல், நிழலாரு மிலையாகி
நின்றாய் நெடுங்காலமே
பார்த்தாலு மயலே கிளைத்தாய்,
சலித்தாய் பசுந்தென்றலால்,
பூத்தாய் பொன்னிறமாக
என்னாகமே யன்ன புன்னாகமே.

என்று பின்னும் புலம்பிப் பேதுறுவாள். இன்னணம் அவள் ஆற்றாதுவருந்தும் நிலையைக்கண்டு பரிவுற்றபாங்கி அவளுடைய மயலைமாற்றி மனதைத் தேற்றும்பொருட்டு,

ஆடுகம் வாநம் மகன்றவ ளூரக லாப்புதுநீர்;
பாடுகம்வாபொற்பசலைதந்தார்திறம்; பாங்கினெல்லாம்
தேடுகம்வாதஞ்சை வாணனன்னாட்டன்பர்தேர்வழிநாம்;
சூடுகம் வாகவ லாதவர் கானற் றுறைமலரே.

---

* இதன் முன்னிரண்டடி தனக்குங் கடலுக்குஞ் சிலேடை:—(நான் வாய்விட் டழுகின்றேன்.) நீ கரையிடத்தே சத்திக்கின்றாய்; (நான் சந்தனத்தை வெறுத்தெறிந்தேன்.) நீ முத்துக்களைக் கரையில் வீசுகின்றாய்; (நான் கைவளைகள் கழன்று சிந்தும்படி மெலிந்தேன்.) நீ வெண்மையான சங்குகளைக் கரையில் எறிகின்றாய்; (நான் குளிர்ச்சி பொருந்திய மலர்ப் படுக்கையைத் தூரத்தே தள்ளிவிட்டேன்.) நீ குளிர்ந்த தாவுகின்ற அலைகளை வரிசை வரிசையாக முன்னே செலுத்துகின்றாய்; (நான் காமமயக்கங் கொண்டுள்ளேன்.) நீ கருநிறத்தைப் பெற்றிருக்கின்றாய். [ஆரம் - சந்தனம், முத்து. மால் - மயக்கம், கருமை.]

† செம்பொன்னையொத்த தலைச் சூட்டினை யுடைய அன்னப் பறவையே! விளங்கும் வளைகள் கையினின்று கழன்று விழும்படி வருந்தி யழுகின்ற என்னைப் பார்த்திருந்தும் (பரிவின்றி), மிகவும் மகிழ்ச்சியைத் தருங் குளிர்ந்த முத்துக்களை யளிக்கும் பெரிய கடலின்கண் கமலச் சேக்கையிலே பொருந்தியபெடையோடு நீ இனிது துயிலுதல் தகுமோ? என் தலைவரைப் போல உனக்கும் என்னிடத்திரக்கம் இல்லையோ?

‡ கூடலிழைத்துக் குறி கொள்ளலாவது, மகளிர் தம்மை நெடுநாட் பிரிந்து சேணகன்ற காதலர் திரும்பி வந்து சேர்வரோ மாட்டாரோ என்று தெய்வத்தை வணங்கிக் கண்களைமூடிக்கொண்டு மணலில்கைவிரலால் வட்டமாகச் சுழித்து அவைகள் தலையுங் கடையுங் கூடி முழுவட்டமாக முடிந்தால் தலைவர்சேர்க்கை நேருமென்றும், அவ்வாறு சுழிகள் வட்டமாய்ப் பொருந்தாவிடில் தலைவருடன் கூட்டம் நிகழாதென்றும் குறிபார்த்தறியுமொரு பண்டைய வழக்கு.

*கூடல் - கூடற்சுழி; கூடலைக் குறிக்கும் வட்டச் சுழி.



என்று அவளைத் தழுவியழைத்துச் சென்று வீடு சேர்வாள்.

இவ்விதம் பலநாள் செல்ல ஒருநாள் அந்திநேரத்தில் அவர்களிருவரும் கடற்றுறையை நண்ணலும், தலைவி தலைவனது தேர்ச்சுவட்டையும் காற்சுவட்டையுந் தேர்ந்துசென்றுத் கண்ணுற்று தன்னுண்ணின்றழலுங் காமக்கனலைத் தணிக்கவெண்ணி நெய்சொரிந்து எரிநொதுப்புவாரைப்போல, அவைபதிந்த மணலையெடுத்துத் தன்மேனியிற்பூசிக் கண்ணிலொற்றிக்கொள்ளவும் சந்தாபம் அதிகரிக்கலுற்று,

கடலே கழிக்கரையே கைதையே குளிர்கானல் மணற்
றிடலே தலைவர்பொய்ச் சூளுரை யாலுடல் தேம்புவனே

என்றும்,

புறந்தாழ் வரிசினைப் புன்னையங் கானல்மென்
பூந்துறைவர்
சிறந்தாழ் கருங்கடற் றெய்வமுந் தீதுகொல்
சிந்தை! என்னாண்
துறந்தாவி சோர அவருற்ற நாளுற்ற
சூள்முழுதும்
மறந்தா ரிருக்க மறவாத நம்மை
வருத்தியதே.

என்றும் கூறி வருந்தாநின்றாள். வருந்தி நின்றுழி அவளைப் பாங்கி அணுகி, "கைவல் கம்மியன் செய்த கற்கண்டுப் பாவையன்னாய், இவ்வாறு நீ கண்ணீருகுத்துக் கரைந்துருகி அழியாதேகொள். இன்று நாளை வந்து விடுவர் உன் தலைவர்." என்று சொல்லி அவளை ஆற்றுவித் தழைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினாள். வீட்டருகே வரும்போது தூரத்தே தேரொலி கேட்டுத் தலைவன்வருகையை அறிந்த தோழி, "உனது மேனிப் பசப்புஞ் சிந்தாகுலமுந் தனிமையும் நீங்குமாறு தலைவர் அதோ வந்து விட்டார். அவருடைய தேரின் மணியொலியும் தாரின் மலர்மணமும் இங்கு வந்துற்றன காண். நீ சென்று வீட்டகத்தே இரு. நான் அவர் வருந்தனையும் இங்கே தங்கியிருந்து அவரைக்கண்டு, கருத்தையுணர்ந்து மேலவர் செய்யக் கருதிய காரியம் யாதென்றும் அறிந்து வருகின்றேன்." என்று சொல்லி அவளைப் போக விடுத்துத் தான் முன்சென்று தலைவன் வரும்வழி நோக்கி நின்றாள். சிறிது நேரத்தில், தேரைக் கானற்கழியிடத்தே நிறுத்திவிட்டுக் கால்நடையாய் வந்த தலைவனை அவள் கண்ணுற்று, எதிர்சென்று வலஞ்செய்து வணங்கி நின்று, "செவ்வேலைய, உமது ஒருநாட் பிரிவையுன்னிக் கலுழாநின்ற தலைவியின் கண்முத்தந் துடைத்துத் தலையளி செய்தகன்ற நீர் இத்தனைநாள் அவளைவிட்டுப் பிரிந்திருக்க எவ்வாறு வலித்தது உம்முள்ளம். கருங்குழல் சோரக் கைவளைபாறக் கண்ணீர்வார, மெல்லுடல் தேய்ந்து ஒண்ணுதல் பசந்து தலைவி இங்கே தனித்துயருழந்து தவிப்பதை நீர் நனவிற் காணாவிடினும், கனவிலேனும் அங்கே கண்டிலீரோ. கண்டிருந்தால் அவளை மறந்து அங்கேஇதுகாறுந் தங்கியிரீர். பேதையர்மாட்டுப் பெரியோர் புரியுந் தண்ணளியும் இதுவேயோ?" என்று நொந்து வினவினாள். அதற்கு அவனும், "என்னைப் பிரிந்த தலைவி இங்கே எவ்வாறு அனங்கன் கையலரையும் அயலார் வாயலரையுந் தாங்கி உயிர் தரித்திருந்தாள்? எப்படி நீ ஆற்றுவித்தாய், சொல், ஆரணங்கே" என்று பரிந்தெதிர் வினவ, அவள், "மாமகிழ் தாமமார்ப, நீர் அன்று சொல்லிய சொல்லைப்பேணி, உம்மூர்நெறி காட்டியும், நீரன்றுசென்ற தேர்ச்சுவடு காட்டியும், உம்வரவை நிகழ்த்திடும் புட்குறி காட்டியும், நான் இதுகாறும் அவளுயிரை அரிதிற் காத்திருந்தேன். இனி அவள் உம்மைப் பிரிந்து உயிர்தரியாள். நாளையே வந்து அவளை வரைந்துகொள்ளும்." என்று அவனை வற்புறுத்தித் தெருட்டினாள்.

இவ்வண்ணம் பாங்கி தெருட்டத் தெருண்டு தலைமகன் தலைவியின் தாய்தந்தையரின் சம்மதி பெற்றுப் பரிசப்பொன்னைக் கொடுத்து நல்ல நாளிலே அவளை மணஞ் செய்துகொள்ளலும் ஒன்று.

K. இராமரத்நம் ஐயர்.

# கம்ப ராமாயணம்.

## பாலகாண்டம்

### 7. தாடகை வதைப் படலம்.

(665-ம் பக்கத் தொடர்ச்சி.)

இயல்பு திரியா இராமன் செய்கை.

இனித் தாடகையின் வரலாற்றை விச்வாமித்திரன் இராமனுக்குச் சுருங்கக் கூறுவானாகிச் சுகேது என்னும் இயக்கன் தவம்செய்து நான்முகன் வரத்தினால் திருமகளனைய அழகும் ஆயிரம் யானைகளின் வலியும் ஒருங்கே தங்கிய ஓர் மகளைப்பெற்றதும், அவள் சுந்தன் என்பவனை மணந்ததும், அவ்விருவர்க்கும் மக்களாய் மாரீசன் சுவாகு என்றிருவர் பிறந்ததும், பிறகு சுந்தன் செருக்குற்று அகத்தியனைவருத்த அம்முனிவனின் சினத்தீகதுவிச் சாம்பரானதும், இதுகேட்ட அவன் மனைவியும் மைந்தரிருவரும் முற்றிய கோபத்தினராய் அகத்தியனைக் கொன்றுவிடுவதென அவன்பால் நண்ணியதும், அசுரர்களால்வந்த இடுக்கண்ணைத் தீர்க்கும் பொருட்டுக் கடலெலாம் ஒருகை மொண்டு உண்டவனும் தமிழென்ற அளப்பதற்கரிய சாகரத்தைத் தந்தவனுமாகிய அம்முனிவான் இவர்களை, "அழிவன செய்தலால் அரக்கராகியே இழிக" என்று சபித்ததும், அச்சாபத்தின்படி இராக்கதராகிய மாரீசனும் சுவாகுவும் அரக்கராய் மாறியவுடன் இராவணனின் தாய்வழிப் பாட்டனாகிய சுமாலியை அடைந்து அவனுக்குத் தாம் புதல்வரென உறவு கொண்டாடப் புகுந்ததும், பிறகு சழக்கியாய தாடகை அகத்தியன்பால் அழலெனக் கோபம் புழுங்கிய நெஞ்சினளாய்த் தன்னிரு புதல்வரோடும் அவ்வனமெலாம் அழித்துத் திரிவதும் இயம்பி,

உளப்பரும் பிணிப்புறா வுலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள்.

[உள்ளத்தில் பருத்த கட்டாகக் கட்டிக்கொண்டு உலோபம் என்ற வொன்று இருக்குமாயின் அதுவொன்றே அளவிலாக் குணங்கள் வேறு எத்தனை இருந்தாலும் அத்தனையையும் அழித்து விடுவதுபோல, சொல்லுதற்கும் இயலாத கொடுமை செய்யும் அந்த அரக்கி, குறைவற நிறைந்த வளமுடைய இந்த மருதநிலத்தையும் அழித்துப் பாலையாக மாற்றினாள்.]

என்று பழிபடா மன்னவன் படைத்த நாட்டிலும் இப்பாகம் அழிவடைந்து கிடந்ததற்குக் காரணம் காட்டினன். உலோபிகளின் உள்ளத்திற்குத் தாடகைவனத்தை உபமானமாய்க் காட்டுவதே வழக்கிற்கேற்ற முறையாலும், கிடைத்த செவ்வியைக் கைகடக்க விடாமற் கம்பர், தனக்கே என வாழும் சுயநயக் கயவனது மனத்தின் இழிவு இன்னபடி இருக்கும் என்று நாம் காணுமாறு இங்கு அமைக்கின்றார். உலோபம் புகுந்து பற்றி விட்டால் பின் நற்குணங்கள் ஒன்றும் அங்கு நில்லா. கம்பர் இங்குக் கூறியபடி மனத்தின் வளமெல்லாம் அழிவதும், "வறியோர்க்கு ஏமம் கொடாதார் அகம்போல்," கார்கோடகனல் கடிப்புண்ட நளனின் வாம நெடுந் தோள் குறுகியதென்று புகழேந்திப் புலவர் சொல்லும் வண்ணம் மனதின் பெருமை சுருங்குவதும், உலோபத்தால் உண்டாகும் கேடுகள்.

"இயக்கியாய்ப் பிறந்து சழக்கியாய் மாறிய இத் தாடகை அவ்வங்கநாடு எங்கும் உயிர்களை எல்லாம் குலத்தோடழித்துத் திரிகின்றாள். வேறென்ன புகல வேண்டும்! இன்னும் சிறிதுநாளில் உலகிலுள்ள உயிர்கள் அடங்கலும்தின்றுதொலைப்பாள்" எனக்கோசிகன்சொன்னன்.இவ்வளவும் கேட்டுவந்த இராமன்வியந்திலன். எத்தகைய மெய்ப்பாடும் அவன்பால் தோன்றவில்லை. எப்பொருள் யாவர்வாய்க் கேட்பினும் அப்பொருட்குமெய்ப் பொருள் தானே ஆய்ந்துணரும் கருத்தினுழத்தினுல், மிகவும் அமைதியோடு,

கொங்குறை நறைக்குல மலர்ச்செனி குலாக்கா
எங்குறை வதித்தொழி லியற்றுபவ ளென்றான்.

[வாசனைதங்கிய தேனையுடைய சிறந்த மலர்களணிந்த தன் சிரத்தை அசைத்து, 'இக்காரியம் செய்கின்றவள் வசிக்கும் இடம் எது' என்று வினவினன்]

அவ்வளவே. இத்தொழில் இயற்றுபவள் என்பானேயன்றி, இத் தீத்தொழில் என்றுகூடச் செப்பான். காணுதவொன்றைக் கேள்வியாலேயே கடிந்துரைத்தல் தக்கதன்று. அதுவுமன்றிக் கடியவேண்டுமாயின் தாடகையை ஒறுப்பதுபோக்கி அவள் தொழிலைச் சொற் கொண்டு வைவதால் பெருமை எது! பாலையாய் அழிந்து கிடப்பதற்குக் காரணம் 'வேறுதான் உண்டோ' என்று அங்கு வினவுதற்கொத்த இராமனின் அகன்ற மனமே, இங்கும் 'இத்தொழில்' என்னும் அளவோடு அதன் பண்பைக் குனிக்காமல் நின்றுவிட்டது.

விச்வாமித்திரனுக்கு மனஞ் சிறிது சலித்திருக்கும். "அவளிழைக்கும் கொடுமையைப்பற்றி இவ்வளவு கூறினேன். இச்சிறுவன் உள்ளத்தி லெள்ளளவுஞ் சினங் கொண்டிலனாய், என்பால் இரக்கங்கொண்டு ஆதரிப்பான்போல் மிக்க பெருமையோடு தலை பணித்து, 'நீ சொல்லும் இச் செய்கை செய்பவள் எங்குளாள்' என்று ஒன்றிலும் ஒட்டாமற் கேட்கின்றானே" எனக் கோசிகன் பிணங்கி யிருத்தலும் இயற்கையே. "இப்பாதகி எங்குளாள், நின்னுரை கேட்கவே எனக்குச் சினம் பொங்குகின்றது. இன்றே அவளைக் கொன்று விடுகின்றேன். இல்லையேல் யான் இராமனல்லன்" என்னச் சூளொடு தளும்பி இராமன் உங்கரித்திருப்பானாயின் கோசிகனுக்கு, இந்நிலைக்கும் தன்னுரைக்கும் அதுவே ஏற்றதாய்த் தோன்றி யிருக்கும். ஆனால், இராமனின் குணம் அதுவன்று. இராமனுக்கு அமைந்த பல குணங்களில் இந்நிலைக்கு ஏற்ற சிலவற்றைத் தழுவிக் கம்பர் இங்கு உரைத்த உண்மையை நன்கு காணலாம். நிகழ்ந்த வொன்றை நாடக முறையில் நவில்வோர் பாத்திரங்களின் இயற்கைக்குணம் வழுவாது காத்தமைத்தல் வேண்டுமென முன்னோர்கால் கூறியுள்ளோம். இவ்விலக்கணத்திற் கிணங்கி இச்சிறு சம்பவத்திலும் கம்பரின் நுண்மைத்திறம் தோன்றலாகின்றது. உற்று நோக்கின், இராமன் ஒரே குணத்தனாய் எந்நாளும் எங்கும் விவகரித்தல் தெரியவரும்.

பெரியோ ரொன்றுரைத்தால் அதனை இளைஞராயினோர் வணக்கத்துடன் செவிசாய்த்து ஏற்றுக்கொளல் முறையேயன்றி, "நீர்சொன்னது நன்று, மேலினி யான் கேட்பதற்கு விடைகூறும்" என்னும் பொருளில் சென்னி குலுக்கி வினுதல் தக்கதன்றெனச் சிலர் எண்ணுவர். எனினும், இராமன் முறைபிறழ்ந்த கர்வத்தால் இது செய்தவனல்லன். தன் வயதிற்கு மேம்பட்டவோர் நிலையில் தன்னை வைத்துக்கொண்டு விவகரிக்கும் வழக்கம் அவனுக்கு மிக்க இளமைதொட்டே இயற்கையாய் விட்டது. இல்லையெனில் பாலகனாய் நகரிலும் பொழிலிலும் திரிதரும் நாளில்,

எதிர்வரு மவர்களை யெமையுடை யிறைவன்
முதிர்தரு கருணையின் முகமல ரொளிரா
எதுவினை யிடரிலை யினிதினு மனையும்
மதிதரு குமரரும் வலியர்கொ லெனவே.

[எமது இறைவனாகிய இராமன், எதிர் வருகின்றவர்களை முதிர்ந்த கருணையோடு முகமலர்ந்து நோக்கி 'என்ன சமாசாரம், சவக்கியமா, உம் மனைவி இனிது இருக்கின்றனரா. உம் குமரர் புத்திசாலிகளாயும் பல சாலிகளாயும் வளர்கின்றார்களா ?']

என வினவுதல் ஏற்றதாமோ. பன்னீராட்டைச் சிறுவன் ஒருவன் எதிர்ப்படும் முதியோரை நோக்கிச் சுகம் வினவுவது மல்லாமல் மனைவி மக்களைப்பற்றியும் நலம் விசாரிக்கப் புகுவானாயின் அவனை என்னென்று மதிப்போமென்று கூறுவது மிகை. ஆனால், மற்றவர்பால் குற்றமாய்த் தோன்றுமிது இராமனுக்கு ஏற்றதாய் விளங்கும். வயதும் உருவமும் கடந்து வளர்ந்த அறிவினால் வரும் இச்சொல் இராமன் வாயினின்று இயற்கையாய்ப் பிறத்தலால் இழுக்கொன்றும் இதனிற் காணவொண்ணாது. வினவப்பட்டோரும் கண்டிலர். ஆதலால் அவர்,

அஃதய நினையெம தரசென வுடையேம்
இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவி மலரோன்
உகுபக லளவென வுரைநனி பகர்வார்.

['ஐயனே, யாவரும் சுகமே. உன்னை அரசென்று உடைய எங்களுக்கு எம் வாழ்க்கை ஒரு பொருளன்று. பிரம்மன் ஆயு ளெவ்வளவோ அவ்வளவு காலம், நீ எங்கள் உயிரையும் இவ்வுலக மேழையும் பெற்றாளக் கடவாய்' என்று நன்னயமொழிகள் எதிர் பகர்வார்]

எந்நிலையிலும்யாவர் மாட்டும் இராமன் சீற்ற மென்பது சிறிதுங் கொள்ளாக் குணமுடைய மேன்மையன். தாடகை கிடக்கப் பின்னாள் இராவணனை எதிர்த்துப் பொருகின்ற காலையிலும், "அந்தக்கூனி கூன்போக வுண்டை செறித்தபோ தொத்தன்றிச் சின வுண்மை தெரிந்த தில்லை" என அவ்விராவணனே வியக்குமாறு அமைதியோடு தன் கரும மாற்றிய இப்பொறையுடை இராமனுக்கு இன்று சினந் தோன்றாமையே இயற்கை யுண்மை காத்ததாகும்.

வன்சொல்லும் ஒருபோதும் இவ்விராமனின் வாய் நின்று வாரா. எத்தொழில் யாவர்தாம் புரியினும் அதனால் வரும் தீமையை விலக்குதற்கொத்த கருமம் யாதென நினைப்பதில் அவன் சிந்தனை செல்லுமேயல்லாது, அத்தொழிலைப் பலபடப் பழித்துரைக்கும் சொற்களைச் சொரிந்து நில்லான். பின் ஆரணியத் துறையும்



நாளில், வஞ்சியென நஞ்சமென வந்த வஞ்ச மகள் சூர்ப்பநகை, "காமன் என்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி" என்று பழிப்புறு வாசகத்தால் இரந்த போதும் இராமன், "நாணிலள், நொய்யள், நல்லளும் அல்லள்" என்பதனினும் வன்மையாய் அவளைப்பற்றி நினைத்திலன்.

ஆதலின், இராமனது குணத்தின் இயற்கைத் தொடர்ச்சியை நோக்குங்கால் அவன், இங்குத் தன் சென்னி குலுக்கி, "எங்கு உறைவது இத்தொழில் இயற்றுபவள் ?" என்றல்லாது வேறுவகை வினவியிருப்பானாயின் அது அவனைக் குணம் பிறழ்ந்து நடத்திய குற்றத்திற்குக் கம்பரை ஆளாக்கி யிருக்கும்.

இவ்வாறு ஒன்றிலும் படாமல் இராமன் கேட்டது விச்வாமித்திரனின் மனதிற் சிறிது சலிப்பு விளைத்திருப்பினு மிருக்கலாம். ஏனெனில், இதற்குப் பதில் கூறுவதாக வந்துள அடுத்த செய்யுள் இந்தச் சந்தேகத்திற்கு இடந்தருகின்றது :—

கைவரையெ னததகைய காளையுரை கேளா
ஐவரைய கத்திடைய டைத்தமுனி யைய
இவ்வரையி ருப்பதவ ளென்பதெனின் முன்போர்
மைவரைநெ ருப்பெரிய வந்ததென வந்தாள்.

[ஐம்புலன்களையும் அடக்கிவைத்திருக்கின்ற கோசிக முனிவன், யானைபோன்ற தோற்றமுடைய இராமனின் வார்த்தையைக் கேட்டு, "ஐயனே, இந்த எல்லையில் தான் அவள் இருக்கின்றாள்" என்று சொல்லி முடிவதற்கு முன்னரே ஒரு கரிமலை எரிந்துகொண்டு வருவது போல் தாடகையே வந்து விட்டாள்.]

விச்வாமித்திரனை இங்கு, "ஐவரை அகத்திடை அடைத்தமுனி" என்பானேன் ! புலன்கள் செல்வழி மனமும் தொடர்கின்ற காலத்தில்தான் காமவெகுளி மயக்கமாகிய மும்மலங்களும் வெளித்தோன்றும். இம்முனிவன் புலன்களை அடக்கிவைத்துளானாதலால் தன் மனத்தில் இக்காலம் பிறந்த சிறு வெகுளியையும் தோன்றாவண்ணம் அகத்தே அடக்கிவிட்டானென்று குறிப்புணர்த்தவோ, யாதோ ! இவன் இந்திரியங்களை அடக்கியே வைத்துளானன்றி வசிட்டனைப்போல் அவைகளை அறவே அகற்றிலன் என்பது தெரிகின்றது. ஏனெனில் வசிட்டனைப்பற்றிக் கூறும்போது கம்பர், "கசட்டுறு வினைத்தொழில் கள்வராய் உழல் அசட்டர்கள் ஐவரை அறுவராக்கிய வசிட்டன்" என்று வேறுபடக் காட்டியுள்ளார். ஆதலால், விச்வாமித்திரன், சிரமசைத்து "யாங்குளள் இவள் ?" எனக்கேட்ட இராமனுக்கு, "ஐய, இவ்விடத்தில்தான் இருக்கின்றாள்" என்று கூறிய பின் யாது உரைத்திருப்பானோ, அறிகிலேம். முன் இராமன் எதிர்படும் அயோத்தி மாந்தரைச் சுகம் வினவியபோது அவர்,'ஐய' வென்று இவனை அழைத்து அன்பினால் விடைதருவது போன்றே, இங்கும் விச்வாமித்திரன் 'ஐய' என வழைக்கின்றான். ஆதலால் விச்வாமித்திரனையும் இராமன் தன் செய்கையாலும் சொல்லாலும், அவை பிறர்பால் எத்தகையனவாய்த் தோன்றிய போதிலும், இரமிக்கச் செய்திருப்பான் என்றே எண்ணலாம். எனின் உரை தொடர்ந்திருக்குமாயின் அவை நயமொழிகளாகவே அமைந்திருக்கும். ஆனால், அதற்குள் இவர்களது உரைக்கு இலக்காய தாடகையே எதிர் வந்து தோன்றிவிட்டாள். T. N. சேஷாசலம்.


தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

## அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது ? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.



உ

## வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அன்பு | 0 | 1 | பொதுமதம் | 0 | 2 |
| பலவகை மனிதர் | 0 | 1 | ஆருதாரம் | 0 | 2 |
| தவம் | 0 | 1 | சந்தேகம் | 0 | 2 |
| பொறுமை | 0 | 1 | கற்பு | 0 | 3 |
| இருவினை | 0 | 2 | அஸ்தபூஷணம் | 0 | 4 |
| இல்லறம் | 0 | 2 | பதினாறுபேறு | 0 | 4 |
| ஆலயவழிபாடு | 0 | 2 | என் தந்தையார் | 0 | 6 |

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

## கம்பராமாயணம் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெருது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்ருர்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

## ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

# KAMBAN'S KOSALA
or
## A Poet's Plea for Culture
### by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

### With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.




## வர்த்தமானம்.

**திருவனந்தபுரத்தில் தொத்துநோய்:**—திருவநந்த புரத்திலும் அதற் கருகாமையிலுள்ள கொட்டயம் என்னும் இடத்திலும் தொத்துநோய் பலமாகப் பரவி ஜனங்களை வருத்தி வருகிற தென்றும் அதைத்தடுக்க அரசாங்கத்தார் முயன்றுவருகின்றன ரென்றும் தெரிகிறது.

***

**சாஸ்திரியார் கல்லூரி:**—தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்திய மக்களுக்கென டர்பான் என்னுமிடத்தில்,தென்னுப்பிரிக்கா இந்தியர் முயற்சியால் கல்லூரி ஒன்று ஏற்பட்டுள்ள தென்றும் அதற்கு சாஸ்திரியார் கல்லூரி என்று பெயர்வைக்கப்பட்டுள்ளது என்றும் தென்னுப்பிரிக்காச் செய்தி கூறுகிறது.

***

**சரோஜினிதேவி:**—ஸ்ரீமதி சரோஜினிதேவி செப்டம்பர் மாதம் 12ந்தேதி யன்று ஐரோப்பியப் பிரயாணத்திற்குப் புறப்படுவார் என்று தெரிகிறது. இத்தாலியா, பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம்செய்து இங்கிலாந்து செல்வார் என்றும் பின்னர் அக்டோபர் கடைசியில் அமெரிக்கா செல்வார் என்றும் தெரிகிறது.

***

**இருவர் கைதியாயினர்:**—சூரத்தில் நடந்துவரும் வாரப்பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் ஜோஷியும், அதை வெளியிடும் அச்சுக்கூடச் சொந்தக்காரரான ஸ்ரீமான் பராக்ஜி என்பவரும் இந்திய பீனல்கோட்டின் 292, 295-வது செக்ஷன்படி குற்றம் செய்துள்ளார் என்று கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று பம்பாய்ச் செய்தியொன்று கூறுகிறது.

***

**சென்னையில் காலரா:**—காலரா என்னும் தொத்து நோய் சென்னைவாசிகளை வருத்திவருகிறது. சென்ற ஒருவாரமாக நோயின் கொடுமை சிறிது குறைந்துள்ள தெனவும், எனினும் சென்ற வெள்ளியன்று சென்னையில் 13 பேர் இந்நோயை உற்றனர் என்றும், அவர்களில் 7பேர் இறந்தனர் என்றும் சுகாதார அதிகாரி கூறுகிருர். சென்னை முனிசிபாலிட்டியார் இந்நோயைத் தடுக்கவேண்டுவன செய்துவருகின்றனர்.

***

**அன்னிபெஸண்டு அம்மையார்:**—இந்திய அரசியல் பிரசாரவிஷயமாக இங்கிலாந்து சென்றிருந்த ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அம்மையாரும் ஸ்ரீமான் சிவராவும் சென்ற வாரக்கடைசியில் பம்பாய் வந்து சேர்ந்தனர். அங்கிருந்து அவர்கள் வடஇந்தியா போயிருக்கின்றனர். டில்லியில் கூடும் அகில இந்திய சர்வகட்சிக் கூட்டம் முடிந்ததும் இருவரும் சென்னைவருவர் என்று தெரிகிறது.

***

**யுத்தம் நிறுத்த முயற்சி:**—உலகத்துள்ள அரசாங்கத்தினர் ஆயுதங்களைக் குறைக்க வேண்டுமென்றும், யுத்தம் செய்தல் அரசியல் முறையாயிருத்தல் ஒழிய வேண்டுமென்றும் முயற்சிசெய்து கெல்லக்கு என்பவர்கொண்டு வந்த திட்டம் எல்லா நாட்டாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தென்றும், இவ்வாரம் பாரிஸ் நகரில் இதில் ஒவ்வொரு நாட்டாரும் கையெழுத்திட்டனர் என்றும் தெரிகிறது. ராஜதந்திரிகள் இதைப் புகழ்கின்றனர்.

***

**ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார்:**— சென்னைவாசியான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஐரோப்பிய பிரயாணத்தை முடித்துக்கொண்டு 26ந்-தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை வந்து சேர்ந்தார். சுயராஜ்யக் கட்சியார் பொதுஜன வரவேற்பொன்றை அளித்தனர். மாலையில் ஸ்ரீமான் ஐயங்கார், தமது ஐரோப்பியச் சுற்றுப் பிரயாண அனுபவத்தைப்பற்றியும், சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் கடற்கரைக் கூட்டத்தில் பேசினர்.

***

**125 கோயில்கள் கட்டப்பட்டன:**—பிரஞ்சு தேசத்து அராஸ் மேற்றிராசனத்திலே மகா யுத்தத்தின் போது ஜெர்மானியராலே தகர்க்கப்பட்ட 240 கத்தோலிக் கோயில்களுள் 125 கோயில்கள் பூரணமாக வேலை முடிந்து தேவாராதனை ஆரம்பிக்கப்பட் டிருக்கின்றன. 51 கோயில்கள் தற்போது மீளவுங் கட்டப்பட்டு வருகின்றன. ஏனைய 30 கோயில்களைக் கட்டுவிக்கும் வேலை அதி விரைவிலே ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. 1929-ம் ஆண்டிலே அராஸ் மேற்றிராசனத்தில் ஏறக்குறைய இன்னும் 30 கோயில்களே கட்டப்பட வேண்டியனவாயிருக்குமென்று நம்பப்படுகிறது. மேற்குறித்த கோயில்களின் கட்டட வேலைக்கென எல்லாமாகச் சேர்ந்துள்ள நிதி 18,75,000 பவுன்.

***

**இரங்கோனில் இரு திட்டங்கள்:**—சைமன் கமிஷன் பகிஷ்கார விஷயமாய் இரங்கூனில் ஒரு பர்மியர் கூட்டம் 26-ந்தேதி மாலை நடந்தது. இக்கூட்டத்திற்கு சட்டசபை அங்கத்தினர்களும், சுயராஜ்ஜியக் கட்சியினரும், இந்தியர்களும் விஜயமாயிருந்தனர். சைமன்கமிஷன் பகிஷ்கார வேலையைச் செவ்வனே நடத்தவேண்டுமென்றும் அதற்கென ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. அன்றே 'பர்மா பர்மியருக்கே' என்று கேட்டுவரும் கட்சியினர் ஒரு கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்தில் பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிட வேண்டுமென்றும் பர்மாவிற்குக் குடியேற்ற நாட்டு உரிமை வேண்டுமென்றும் பர்மியர் சைமன் கமிஷனுடன் ஒத்துழைக்கப் போவதாயும் தீர்மானங்களைச் செய்தனர்.

189018

***

**நேரு அறிக்கை:**—ஸ்ரீமான் மோத்திலால் நேரு செய்த இந்திய சுயராஜ்ய அறிக்கையைப் பற்றி இந்தியாவில் அபிப்பிராயங்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. நேரு அவர்கள் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற உரிமைகளை இந்தியா பெற வேண்டுமென்று கூறியுள்ளார். டாக்டர் டெஜ்பகதூர் சாப்ரு போன்ற மிதவாதிகளும், ஸ்ரீ லஜபதிராயும், அவரது நண்பர்களும் ஆதரிக்கின்றனர் என்ருலும் இதனால்இந்து மஹா சபையினருக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. லண்டனிலிருந்து சில தினங்களுக்குமுன் சென்னை வந்த ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் நேரு அறிக்கையைப் பற்றிக் கூறியதாவது:—

"நான் நேரு அறிக்கையை ஏற்க முடியாதவனாகவிருக்கிறேன். இதை ஒப்புக்கொண்டால் சென்னை காங்கிரஸ் செய்த தீர்மானத்தைத் தள்ளி விட்டதாகும். எனது ஐரோப்பியப் பிரயாணம் எனது முழு விடுதலைக் கொள்கையை ஊர்ச்சிதப்படுத்தி விட்டது."

இத்தகைய அபிப்பிராயங்கள் நாட்டில் ஒரு பிளவை உண்டு பண்ணும் என்று தெரிகிறது. லக்ஷ்மணபுரியில் 25-ந்தேதி யன்று கூடிய கிலாபத்துக் கூட்டத்தில் ஹஸரத் மோஹினி நேரு அறிக்கையைத் தாம் ஏற்க முடியாதென்றும், இந்தியா வேண்டுவது முழு சுயராஜ்ஜியம் என்றும் கூறியுள்ளார்.

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

## Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

**FOREWORD**

BY

## Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

***11. VELLALA STREET.***

**Purasawalkam, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)